ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

(மூன்றாம் பருவம்)

ஆசிரியர்கள்

**குரும்பை உலகநாதன்**

ச.ஜெயலக்ஷ்மி M.A., B.Ed.,

காயத்ரி ஸ்ரீகாந்த் M.D.C.A., DIEd., B.Lit.,

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

V.ஜெகந்நாதன்

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# முகவுரை

"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (**"CCE METHOD"**) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | நாடு / சமூகம் / அரசு / நிர்வாகம் | சிறுபஞ்சமூலம் | 5 |
| | | வாரித்தந்த வள்ளல் | 8 |
| | | தலைமைப்பண்பு | 14 |
| | | இணைச்சொற்கள் | 19 |
| 2 | அறம் / தத்துவம் / சிந்தனை | கல்வியே தெய்வம் | 28 |
| | | நீதியை நிலை நாட்டிய சிலம்பு | 31 |
| | | காணாமல் போன பணப்பை | 37 |
| | | மயங்கொலிச் சொற்கள் | 41 |
| 3 | மனிதர் / ஆளுமை | அறநெறிச்சாரம் | 50 |
| | | புதுவை வளர்த்த தமிழ் | 52 |
| | | நன்மையே நலம் தரும் | 59 |
| | | மரபுத்தொடர்கள் | 63 |
| | | அகரமுதலி | 72 |




இயல் ஒன்று

நாடு / சமூகம் / அரசு / நிருவாகம்

கவிதைப்பேழை

# 1. சிறுபஞ்சமூலம்

**நுழைவாயில் :** அக்கால தமிழ் மன்னர்களின் நிர்வாகம், நீதி நெறி குறையாத ஆட்சிமுறை பற்றியும், அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும் தெரிந்து கொள்ளுதல், கடையேழு வள்ளல்களின் கதைகளையும் அவர்களின் கொடைச்சிறப்பு பற்றியும் அறிதல், இணைச்சொற்களை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் முறை பற்றி அறிந்து கொள்ளுதல்.



கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு

- காரியாசான்

## சொல்பொருள்

| | | | |
|---|---|---|---|
| வனப்பு | அழகு | கிளர் | விளங்குகின்ற |
| வேந்தன் | அரசன் | இத்துணை | இவ்வளவு |
| கண்ணோட்டம் | இரக்கம் | வாட்டான் | வருத்தமாட்டான் |
| பண் | இசை | | |

## பாடலின் பொருள்

★ கண்ணுக்கு அழகு, இரக்கம் கொள்ளுதல்;
★ காலுக்கு அழகு, பிறரிடம் பொருள் வேண்டிச் செல்லாமை;
★ ஆராய்ச்சிக்கு அழகு, தன் கருத்துக்களைத் துணிந்து சொல்லுதல்;
★ இசைக்கு அழகு, கேட்பவர் நன்று என்று கூறுதல்;
★ அரசனுக்கு அழகு, குடிமக்கள் அவனை நல்லவனென்று கூறுதல்.

## நூல் குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் நான்கு அடிகளால் அமைந்த நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. பஞ்ச என்றால் ஐந்து என்று பொருளாகும். மூலம் என்பதற்கு வேர் என்பது பொருளாகும். தமிழ் மருத்துவத்தில் உடல் நோய்களைத் தீர்ப்பதற்கு கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து மருந்தாக்குவது போல, ஐந்து கருத்துக்கள் மூலம், மக்கள் மனநோயைத் தீர்ப்பனவாக இப்பாடல்கள் உள்ளன. ஆகையால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் காரியாசான்.

## கற்பவை கற்றபின்

- பாடலைப் பொருள் புரிந்து படித்துக்காட்டுக.
- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## மதிப்பீடு

### அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

கண்வனப்புக்.................... கால்வனப்புச்....................

எண்வனப்பு ............... என்றுரைத்தல் - பண்வனப்புக்

கேட்டார்நன் றென்றல்.................. தன்னாடு

.................................... வனப்பு.

**ஆ. பிரித்து எழுதுக.**

1. கண்ணோட்டம் - ------------------------------ + ------------------------------
2. என்றுரைத்தல் - ------------------------------ + ------------------------------
3. நன்றென்றல் - ------------------------------ + ------------------------------

**இ. எதிர்ச்சொல் எழுதுக.**

1. வருத்தம் x ------------------------------------------------------------
2. புகழ்தல் x ------------------------------------------------------------

**ஈ. நிரப்புக.**

1. கண்ணுக்கு அழகு ------------------------------------------------------------
2. ஆராய்ச்சிக்கு அழகு ------------------------------------------------------------
3. காலுக்கு அழகு ------------------------------------------------------------
4. இசைக்கு அழகு ------------------------------------------------------------
5. அரசனுக்கு அழகு ------------------------------------------------------------

**உ. பாடலில் இரண்டாம் எழுத்து ( எதுகை ) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

------------------------------ , ------------------------------ , ------------------------------

------------------------------ , ------------------------------ , ------------------------------

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. சிறுபஞ்சமூலம் பாடலின் ஆசிரியர் யார்?
2. சிறுபஞ்சமூலம் - பொருள் என்ன?
3. தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஐந்து மூலிகைகள் என்று சிறுபஞ்சமூலத்தில் குறிப்பிடப்படுபவை எவை?

**எ. சிந்தனை வினா.**

1. எத்தகைய நல்ல பண்புகளை நாம் வளர்த்துக் கொண்டால் பிறரிடம் நற்பெயர் பெறலாம்?

இயல் ஒன்று

# 2. வாரித் தந்த வள்ளல்




சென்று வாருங்கள் ஐயனே! தாங்கள் வரும் வரை நாங்கள் வழிமேல் விழி வைத்து காத்துக் கொண்டிருப்போம்.
வாழிய, மன்னா! உங்களைக் காண இசைப்பாணர் ஒருவர் வாயிலில் காத்திருக்கிறார்.
அப்படியா! உடனே அவரை விரைந்து உள்ளே அனுப்பு!
கொல்லிமலைக் கொற்றவா! கொடைத்திறத்தின் கோமகனே! நீவிர் வாழ்க! உமது கொடை வாழ்க! உன் ஆட்சி ஓங்குக!
தரணியெங்கும் தமிழ் இசையின் புகழ் பரப்பும் பாணரே! வருக! வருக! வளரட்டும் தமிழ்த்தொண்டு! எம்மை நாடி வந்த காரணம் என்னவோ?
வள்ளலே! வறுமையின் காரணமாக எமது வீட்டில் குழந்தைகள் பசியோடு உறங்குகிறார்கள்.
தமிழ் பரப்பும் பாணரே! உமது நிலை என்னை வருத்தமுறச் செய்கிறது.
உணவின்றி என் இல்லாளும், குழந்தைகளும் காற்றை உண்டு கண்ணில் உயிரைத் தேக்கியபடி இருக்கின்றனர்.


கலங்க வேண்டாம் பாணரே! உம் வறுமையைப் போக்குவது என் பொறுப்பு.
மரம் பழுத்து எல்லாருக்கும் பயன் தருவது போல, எம் துயர் துடைத்து உதவுங்கள்.
ஆகட்டும் பாணரே! அமைச்சரே! வாருங்கள்! இப்பாணரின் குடும்பம் பல தலைமுறைகள் வாழ வழி செய்திடுங்கள்.
அப்படியே அரசே! தங்கள் ஆணைப்படி செய்கிறோம்.
பொற்காசுகளையும், அணி மணிகளையும் அள்ளித்தருக! களிறுகளும் அனுப்புக. பற்பல பரிசுகளையும் பேழையில் நிறைத்து அனுப்புக.
தங்களின் ஆணைப்படியே அனைத்தையும் அனுப்பி வைக்கிறேன் அரசே!
கற்ற கல்வி அறியாமை அகற்றுதல் போல, உற்றதுயர் துடைக்கும் வள்ளலே! உங்களின் குன்றாப் புகழ் கொடைப்பண்பு ஓங்குக! வாழ்க! வாழ்க! நீவிர் வாழ்க!
சென்று வாரும் பாணரே! நீரும், உமது சுற்றத்தாரும் என்றென்றும் குறைவின்றி நீடூழி வாழ்க!

## கற்பவை கற்றபின்

- "கல்விச்செல்வமே பிற செல்வங்களை விட நிலையானது" - இக்கூற்றைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
- "வல்வில் ஓரி ஒரு பெரும் கொடைவள்ளல்" - இக்கூற்றுக்கு விளக்கம் தருக.
- கடையெழு வள்ளல்களின் வாழ்க்கைமுறை மற்றும் கொடைச் சிறப்பை அறிந்துகொண்டு வந்து பேசுக.
- கல்வியா? செல்வமா? வீரமா? என்ற தலைப்பில் உன் வகுப்பறையில் பட்டிமன்றம் வைத்து பேசி மகிழ்க.

## மதிப்பீடு

### அ. பொருள் அறிக.

1. வஞ்சனி - பெண், நங்காய், பேதை, மங்கை, மடந்தை, சிறுமி, சுந்தரி, நல்லாள், மாது, நங்கை, மதங்கி
2. தரணி - பூமி, உலகம், அகிலம், ஞாலம், பார், வையம், மண்ணுலகு, மேதினி
3. களிறு - யானை, களபம், ஆம்பல், கரி, கயம், விரமலி, கரிணி, சிந்துரம்
4. சோறு - அன்னம், அமுது, உணவு, உண்டி, ஊண்

### ஆ. எதிர்ச்சொற்களைக் கண்டறிந்து பொருத்துக.

1. கீழும் x தீமை ----------------
2. வினா x தோலும் ----------------
3. விருப்பு x களவும் ----------------
4. வாலும் x விடை ----------------
5. கையும் x வெறுப்பு ----------------
6. நன்மை x மேலும் ----------------

### இ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பொற்காசு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) பொற் + காசு ஆ) பொல் + காசு

இ) பொன் + காசு ஈ) பொ + காசு

2. கொடைத்திறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........

அ) கொடை + திறம் ஆ) கோடை + திறம்

இ) கொட + திறம் ஈ) கொடு + திறம்

3. களிறு என்பது .......................... யைக் குறிக்கும்.

அ) குதிரை ஆ) கழுதை இ) யானை ஈ) ஒட்டகம்

4. தரணி - இச்சொல்லின் பொருள் ..........................

அ) மலை ஆ) உலகம் இ) காடு ஈ) வானம்

5. 'சோறு' இச்சொல்லுடன் பொருந்தாதது..........................

அ) உணவு ஆ) அமுது இ) அன்னம் ஈ) கல்

### ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன?
2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?
3. வல்வில் ஓரி எதனால் பாணருக்கு பரிசுகளை அள்ளி வழங்கினார்?
4. வல்வில் ஓரி பாணருக்கு என்னென்ன பரிசுகள் வழங்கினார்?
5. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
6. "வாரித்தந்தவள்ளல்" - இப்படக்கதை மூலம் நீவிர் அறிந்து கொண்டதை எழுதுக.

### உ. சிந்தனை வினா.

1. வல்வில் ஓரியைப் போல் ஈகைக்குணம் உனக்கிருந்தால் நீ யாருக்கெல்லாம் உதவி செய்வாய்?

### ஊ. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

குப்பன் ஐந்தாம்வகுப்பு படிக்கிறான். தான் செய்யும் வேலையில் யாரும் குறுக்கிடக்கூடாது என்று எண்ணுவான். சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதே அவன் ஆசை. ஒருநாள், அவன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அப்போது, அவனுடைய தந்தை அங்கு வந்தார். "இந்தப் பட்டத்தைப் பார்க்கும் போது உனக்கு என்ன தோன்றுகிறது" எனக் கேட்டார். அதற்குக் குப்பன், "இந்த நூல் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுத்துக் கொண்டிருக்கிறது" என்றான். உடனே அவன் தந்தை, பட்டத்தின் நூலை அறுத்துவிட்டார் பட்டம் தடுமாறிக் கீழே விழுந்தது. இப்பொழுது பார், வரையறைக்குட்பட்டு நூலுடன் இருக்கும் போது இந்தப்பட்டம் எவ்வளவு அழகாகப் பறந்து கொண்டிருந்தது? ஆனால், அந்த நூல்தான் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுக்கிறது என்று நீ நினைத்தாய்.

இப்போது என்ன ஆயிற்று? "நூல் அறுந்ததும் நிலை தடுமாறி, அந்தப் பட்டம் கீழே விழுந்துவிட்டதே! இதுபோலத்தான் நம் வாழ்க்கையும் நூலறுந்த பட்டமாய் இருந்தால் நாமும் வாழ்வில் தடுமாறக் கூடும்" என்று கூறினார்.

### வினாக்கள்

1. குப்பன் எந்த வகுப்பில் படிக்கிறான்?
2. பட்டத்தின் நூல் அறுந்ததும் அதன் நிலை என்னவாயிற்று?
3. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்டது என்ன?

### எ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சிறுபஞ்சமூலம் ............................ நூல்களுள் ஒன்றாகும்.
2. வல்வில் ஓரி ............................................ வள்ளல்களில் ஒருவர்.
3. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் ....................................................
4. அரசனுக்கு அழகு ....................................................................
5. இரவல் என்ற சொல்லின் பொருள் ............................................

### ஏ. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

1. நான் ஆபிஸ்சுக்கு போனேன்.

   ..............................................................................................

2. என் ஆயா ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

   ..............................................................................................

3. தை மாதம் பர்ஸ்ட் நாள் பொங்கல் பெஸ்டிவெல் கொண்டாடினான்.

   ..............................................................................................

4. தீபாவளிக்கு புது ட்ரெஸ் வாங்கினேன்.

   ..............................................................................................

### ஐ. ஓரெழுத்து சொற்களையும் அதன் பொருளையும் அறிவோம்.

அ - எட்டு
ஆ - பசு
ஈ - கொடு, பறக்கும் பூச்சி
உ - சிவன்
ஊ - தசை, இறைச்சி
ஐ - ஐந்து, அழகு, வியப்பு, தலைவன்
ஓ - வினா, மதகு ( நீர் தாங்கும் பலகை )

### ஒ. பாடலை நிறைவு செய்க.

நாடு அதை நீயும் நாடு
பாடு அதன் புகழ் பாடு

# 3. தலைமைப் பண்பு

மைலாப்பூர் என்ற சிற்றூரில் கார்வேந்தன் என்பவர் ஊர்த்தலைவராக இருந்தார். அவர் சிறந்த நிர்வாகி. மக்கள் அவரிடம் அன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தனர். அவ்வூரின் முன்னேற்றத்திற்காகவும், ஊர் மக்களின் நல்வாழ்விற்காகவும் பலரை நாடிச் சென்று பொருள் திரட்டினார். மக்கள் வளமாக வாழ பல நலத்திட்டங்களைச் செயல்படுத்த வேண்டி திறமையான நிர்வாகி ஒருவரை தனக்கு உதவியாக நியமிக்க எண்ணினார். இச்செய்தியை ஊர் மக்களுக்கு பறை அறைந்து அறிவித்தார். அவ்வூரைச் சேர்ந்த தர்மராசு, செல்வநாயகம் ஆகிய இருவருமே அப்பொறுப்பைத் தன்னிடம் வழங்க வேண்டி விண்ணப்பித்தனர். இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று சிந்தித்த ஊர்த்தலைவர் ஒரு முடிவுக்கு வந்தார். மக்கள் மீது உண்மையான அன்பும், சேவை மனப்பான்மையும், நிர்வாகத்திறமையும் கொண்டவர் யார்? என்பதைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு மூன்று போட்டிகள் வைத்தார். அவர்கள் இருவரும் கலந்து கொள்ள ஒப்புதல் அளித்தனர்.



முதல்போட்டி, மக்களுக்குப் பிடித்தவராக இருக்க வேண்டும். போட்டியைப் புரிந்து கொண்ட தர்மராசு அவ்வூர் மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்தளித்தார். மக்கள் வயிறார உண்டு மகிழ்ந்தனர். செல்வநாயகம் அவ்வூரிலுள்ள திறமைசாலிகளை ஒன்று திரட்டி தொழில் சார்ந்த பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது போட்டியாக அவ்வூர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும் என்பதாகும். தர்மராசு இதற்காகத் தன்னிடமிருந்த செல்வத்தை மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கத் தொடங்கினார். இது மக்களுக்கு தர்மராசின் மீது அன்பும் அளவற்ற நம்பிக்கையையும் ஏற்படச் செய்தது. செல்வநாயகம் தாம் தேர்ந்தெடுத்த திறமைசாலிகளுக்குக் கல்வியுடன் மற்ற கலைகளையும் சேர்த்துக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார். இவரது இந்தச் செயல்கள் மக்களை மகிழ்ச்சியடையச் செய்யாதது கண்டு தர்மராசு, “மக்கள் தன்னைத்தான் விரும்புகிறார்கள்” என்று முடிவு செய்து மகிழ்ந்தார்.

மூன்றாவது போட்டி மக்களிடம் பரிவு காட்ட வேண்டும் என்பதாகும். அதனை இருவரும் ஒப்புக்கொண்டனர். மறுநாள் மாலை நேரம். தர்மராசு சாலை வழியே நடந்து சென்றார். அவ்வழியே ஒரு வயதான மூதாட்டி களைப்பு மிகுதியால் மரத்தடியில் படுத்திருந்தார். அவர் எழுந்திருக்கச் சிரமப்பட்டார். தன்னைக் கடந்து சென்ற தர்மராசுவை அழைத்து, “தம்பி! என்னால் எழுந்திருக்க முடியவில்லை. என்னைக் கொஞ்சம் தூக்கிவிடு” என்று கெஞ்சினார். “இல்லை பாட்டி, எனக்கு அவசரவேலை இருக்கிறது” என்று கூறிக் கொண்டே வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார்.

தர்மராசு சென்ற சிறிது நேரத்தில் அவ்வழியாக செல்வநாயகம் வந்தார். வயதான மூதாட்டியின் நிலைமையினை அறிந்து அவர் அருகில் சென்று “பாட்டி! என்ன வேண்டும்?” என்று கேட்டார். “தம்பி, என்னால் எழுந்திருக்க முடியவில்லை, என்னைத் தூக்கிவிடு” என்று கேட்டார். உடனே செல்வநாயகம் அவரைத் தூக்கி உட்காரவைத்து, களைப்புடன் காணப்பட்ட அவருக்கு உணவும், குடிக்கத் தண்ணீரும் வாங்கிக் கொடுத்தார்.

மறுநாள், ஊர்மக்கள் பொதுக்கூட்டத்தை ஊர்த்தலைவர் கார்வேந்தன் கூட்டினார். இன்று உங்கள் முன்னிலையில் நிருவாகிப்பதவியை போட்டியாளர் இருவரில் யாருக்கு கிடைக்கப் போகிறது என்பதை அறிவிக்க உள்ளோம் என்று தலைவர் கூறினார். கூட்டத்தில் பெரும்பாலோனோர் தர்மராசுவே நிருவாகி பதவிக்குத் தகுதியானவர் என்று முணுமுணுத்தனர். செல்வநாயகம் அமைதியாக இருந்தார்.

ஊர்த்தலைவர் இருவரின் போட்டி முடிவுகளையும் கேட்டறிந்தார். தர்மராசு மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கியதையும், தம்மிடம் இருக்கும் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்க திட்டமிட்டதையும் கூறினார். தனக்கு அப்பதவி கிடைத்தால் மக்கள் நலம் பேண மிகச் சிறப்பாக செயல்படுவேன் என்றும், அனைவரிடமும் அன்பாகப் பழகுவேன் என்றும் கூறினார்.

செல்வநாயகம், “ஐயா, நான் திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்து கல்வி கற்பிப்பது மட்டுமின்றி தனியாகத் தொழில் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பயிற்சிகள் கொடுத்திருக்கிறேன்” என்றார். இருவரின் கருத்துக்களைக் கேட்ட ஊர்த்தலைவர், மக்களின் இப்போதைய தேவைக்குத் தர்மராசு வழங்கும் அறுசுவை உணவும் செல்வமும் பயன்படலாம். அவர் தன்னிடமிருக்கும் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்க நினைத்தது மகிழ்ச்சி. ஆனால், எதிர்காலத்தேவை, மக்கள் முன்னேற்றம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. ஆகவே இந்த நிருவாகிப் பதவிக்கு ஏற்றவர் செல்வநாயகமே என்று அறிவித்தார். அறிவிப்பைக் கேட்டு மக்களிடம் சலசலப்பு ஏற்பட்டது.

தலைவர் கார்வேந்தனின் தீர்ப்பை, மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். அதைப் புரிந்து கொண்ட ஊர்த்தலைவர், “சற்று பொறுங்கள். இதோ வருகிறேன் என்று கூறிச் சென்றார். சிறிது நேரம் கழித்து தர்மராசன், செல்வநாயகத்திடம் உதவி கேட்ட மூதாட்டி தள்ளாடியபடியே மக்கள் கூட்டத்தில் நுழைந்தார். தட்டுத் தடுமாறி கீழே விழப்போன மூதாட்டியைச் செல்வநாயகம் விரைந்து சென்று தாங்கிப் பிடித்தார். எல்லோரும் அதைப் பார்த்தனர். தடுமாறி விழுந்த அம்மூதாட்டி, தம்முடைய வேடத்தைக் கலைத்தார். அவர் வேறு யாரும் அல்லர்; ஊர்த்தலைவர் கார்வேந்தனே” ஆவார்.



ஊர் மக்களே! நான் செல்வநாயகத்தைச் சிறந்த நிருவாகி என அறிவித்தபோது அதை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயங்கினீர்கள். இப்பொழுது உண்மையை உணர்ந்து கொண்டீர்களா? எதிர்காலச் சிந்தனை, சமூகப் பொருளாதார முன்னேற்றம், மக்களிடம் பரிவு காட்டும் தன்மை இவை அனைத்தையும் பெற்றவரே சிறந்த நிர்வாகத் திறமை உடையவர் என்று சொன்னார் கார்வேந்தன். இந்தத் திறமை முழுவதும் செல்வநாயகத்திடமே உள்ளது. எனவே அவரே சிறந்த நிருவாகி என்றார். இப்பொழுது ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.

## கற்பவை கற்றபின்

- இக்கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- உமக்கு மிகவும் பிடித்த போட்டி எது? அதில் பங்கேற்றிருப்பின் அந்த அனுபவத்தைப் பற்றிக் கூறுக.
- இக்கதையின் நீதி என்னவாக இருக்கும்?
- பாடத்தில் வரும் கதாபாத்திரத்தில் உனக்குப் பிடித்தவர் யார்? ஏன்?

## மதிப்பீடு

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கார்வேந்தன் எதற்காகப் பலரை நாடிச் சென்று பொருளுதவி பெற்றார்?
2. ஊர்த்தலைவர் அறிவித்த இரண்டாவது போட்டி என்ன?
3. மைலாப்பூர் மக்களுக்கு தர்மராசு மீது நம்பிக்கை ஏற்படக் காரணம் என்ன?
4. சிறந்த நிருவாகி என ஊர்த்தலைவர் யாரை அறிவித்தார்?
5. சிறந்த நிருவாகத் திறமைக்கான பண்புகள் என்னென்ன?

**சிந்தனை வினாக்கள்.**

1. உங்கள் ஊர் முன்னேற்றத்திற்காக நீங்கள் எவ்வகையில் உதவுவீர்கள்?
2. ஒரு சிறந்த தலைமைக்கான பண்புகள் என்னென்ன என்பதைக் கலந்துரையாடவும்.
3. உங்கள் வகுப்பில் மாணவத்தலைவரைத் தேர்ந்தெடுத்தால் யாரை தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன் ? என்று கலந்துரையாடுக.

# 4. இணைச்சொற்கள்

ஒரு வாக்கியத்தில் இரு வேறு சொற்கள் இணைந்து வருவது **இணைச்சொல்** எனப்படும்.

எ.கா. மாப்பிள்ளைக்கு நிலம்புலம் உள்ளதா?

இங்கு நிலம் என்பது நன்செய் வயல் ஆகும்.

புலம் என்பது புன்செய் வயல் ஆகும்.

இணைச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தினால் மொழி நடை சிறக்கும். சொல்லப்படும் கருத்தும் திருத்தமாய் விளங்கும்.

இந்த இணைச்சொற்கள் மூன்று வகைப்படும்.

1. நேரிணை
2. எதிரிணை
3. செறியிணை

**நேரிணை :**

ஒரே பொருள் தரும் இரு சொற்கள் இணைந்து வருவது நேரிணைச் சொற்கள் ஆகும்.

எ.கா. சீரும் சிறப்பும்

உற்றார் உறவினர்கள்

நாணிக் கோணி

**எதிரிணை :**

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருசொற்கள் இணைந்து வருவது எதிரிணைச் சொற்கள் ஆகும்.

எ.கா. அல்லும் பகலும்

உள்ளும் புறமும்

கிழக்கும் மேற்கும்

**செறியிணை :**

ஒரு சொல்லின் பண்பு அல்லது செயலை வலுவூட்டும் விதமாக ஒத்தபொருளுடைய இரு சொற்கள் இணைந்து வருவது செறியிணைச் சொற்கள் ஆகும்.

எ.கா. செக்கச்செவேல்

நட்ட நடுவில்

பார்த்துப் பார்த்து

## கற்பவை கற்றபின்

- நீங்கள் படிக்கும் நூல்களிலிருந்து இணைமொழிகளைத் தொகுக்க.
- இணைமொழிகளைப் பயன்படுத்தி, சிறு உரையாடல் எழுதுக.
- இணைமொழிகள் வருமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.

## மதிப்பீடு

**அ. கீழே உள்ள சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எழுதுக.**

அருமை பெருமை, கன்னங்கரேல், காலை மாலை, அன்றும் இன்றும், தாயும் சேயும், நகமும் சதையும், சீரும் சிறப்பும், உயர்வு தாழ்வு, ஒப்பாரும் மிக்காரும், கண்ணும் கருத்தும், வெற்றி தோல்வி, செக்கச் செவேல்

| நேரிணை | எதிரிணை | செறியிணை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## ஆ. இணைச்சொற்களாகப் பொருத்தி எழுதுக.

1. தாயும் - புரட்டும் ..............................................
2. விருப்பு - மேடு ..............................................
3. ஏழை - சேயும் ..............................................
4. பொய்யும் - எளிய ..............................................
5. பள்ளம் - வெறுப்பு ..............................................
6. இன்பமும் - இங்கும் ..............................................
7. அன்றும் - தாழ்வும் ..............................................
8. அங்கும் - மண்ணும் ..............................................
9. உயர்வும் - துன்பமும் ..............................................
10. விண்ணும் - இன்றும் ..............................................

## இ. கோடிட்ட இடங்களை இணைச்சொற்களால் நிரப்புக.

1. மன்னர் மக்களிடம் ...................... குறைகளைக் கேட்டறிந்தார்.
2. பொங்கல் திருநாளில் .............................. பாடல் நடைபெறும்.
3. அனிதா மேடையில் ......................... தடையின்றிப் பேசினாள்.
4. நாம் அனைவரும் ............... வெறுப்பு இன்றிப் பழக வேண்டும்.
5. கிளியின் மூக்கு ...............................செவேல் என இருக்கும்.

## ஈ. கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( கிண்டலும் கேலியும், மேடும் பள்ளமுமாய், இன்பமும் துன்பமும், கண்ணுங்கருத்துமாக, வெற்றியும் தோல்வியும் )

1. விளையாட்டில் ........................................ சகஜம்.
2. சிறுவர்கள் ஒருவருக்கொருவர் .................. செய்து கொண்டனர்.
3. மழைக்காலங்களில் சாலையெல்லாம் ..................... இருக்கும்.
4. தேர்வில் .................................... படிக்க வேண்டும்.
5. வாழ்வில் .......... உண்டு. அதனைக் கண்டு சோர்வடையக்கூடாது.

# மொழியை ஆள்வோம் !

## கேட்டல்

- பள்ளி வழிபாட்டுக்கூட்டத்தில் கூறப்படும் அறிவுரைகளைக் கேட்டறிக.
- ஆசிரியர் மற்றும் வயதில் மூத்தோர் கூறும் கதைகளைக் கேட்டு மகிழ்க.
- தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விரிவான செய்திகள் மற்றும் உலகச்செய்திகளைக் கேட்டறிக.

## பேசுதல்

- அன்றாட வாழ்க்கைச் சூழலில் நீங்கள் காணும் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- உங்கள் மனம் கவர்ந்த தலைவர்களுள் ஒருவரைப் பற்றி 5மணித்துளிகள் பேசுக.
- வல்வில் ஓரியின் கொடைச் சிறப்பைப் பற்றிப் பேசுக.

## படித்தல்

- செய்யுளைப் பொருள் விளங்கப் படித்துக் காட்டுக.
- பாடப்பகுதியைச் சரியான ஒலிப்புடன் பிழையின்றிப் படித்துக் காட்டுக.

## எழுதுதல்

### 1. சொல்லக்கேட்டு எழுதுக.

1. கண்ணுக்கு அழகு பிறருக்கு இரக்கம் காட்டல்
2. கொல்லிமலையை வல்வில் ஓரி என்ற மன்னர் ஆட்சி செய்தார்.
3. தர்மராசு அவ்வூர் மக்களுக்கு அறுசுவை விருந்தளித்தார்.

### 2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. திறமை - ------------------------------------------------
2. நம்பிக்கை - ------------------------------------------------
3. அறிவு - ------------------------------------------------
4. முன்னேற்றம் - ------------------------------------------------
5. பரிவு - ------------------------------------------------

### 3. ஒலியை உச்சரிப்போம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | - | ண | - | ந | ன் | - | ண் | - | ந் |
| நி | - | னி | - | ணி | லை | - | ளை | - | ழை |
| ல | - | ள | - | ழ | லி | - | ளி | - | ழி |
| ல் | - | ள் | - | ழ் | ர | - | ற | - | ற் |

4. பொருத்தமான சொற்களைக் கொண்டு, தொடரை முழுமையாக்குக.
( கொல்லிமலை, இரக்கம் காட்டல், பாணர், செல்வநாயகம், ஊர்த்தலைவர் )

1. சிறந்த நிருவாகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ..............................
2. வல்வில் ஓரி ஆட்சி செய்த இடம் ..............................
3. கண்ணுக்கு அழகு ..............................
4. ஊரின் முன்னேற்றத்திற்கு பலரை நாடிச் சென்றவர் ..............................
5. இசைப் பாடல்களைப் பாடுபவர் ..............................

5. புதிய சொற்களை உருவாக்குக.

1. பண்பாடு - ..............................
2. சந்திரன் - ..............................
3. பாலைவனம் - ..............................
4. கட்டுரை - ..............................
5. மதிப்பெண் - ..............................

6. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இணைச்சொற்கள் .............................. வகைப்படும்.
2. வாடிவதங்கி .............................. இணைச்சொல்
3. முன்னும் பின்னும் .............................. இணைச்சொல்
4. சின்னஞ்சிறிய .............................. இணைச்சொல்

7. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

1. விலங்குகளுக்கு வால் உண்டு.
   நான் வாள் வீசக் கற்றுக்கொண்டேன். ( வாள் )
2. இந்த மலை உயரமாக உள்ளது.
   .............................. ( மழை )
3. சுவற்றில் பல்லி இருக்கிறது.
   .............................. ( பள்ளி )
4. மல்லிகைப்பூ எவ்வளவு மணமாக உள்ளது.
   .............................. ( மனம் )
5. காட்டு விலங்குகளில் ஒன்று புலி.
   .............................. ( புளி )

## மொழியோடு விளையாடு

### 1. சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வல்வில் ஓரி வாரித் தரும் வ.........ள......... ( ள், ல், ழ் )
2. பாணரே! உம் வ.....மையைப் போக்குவது என் பொ.....ப்பு ( று, ரு )
3. களிறும் கொடையாய் நல்கும் வா ..... புக ..... வல்வில் ஓரி ( ன், ண் / ல், ள், ழ் )
4. மக்களுக்கு தர்மராசு மீது அளவ ..... ற நம்பிக்கை ஏற்பட்டது. ( ற், ர் )
5. செல்வநாயகம் மூதாட்டிக்கு உ ...... வு வாங்கிக் கொடுத்தார். ( ண, ன, ந )

### 2. கொடுக்கப்பட்ட சொற்களையும், குறிப்புகளையும் கொண்டு புதிய சொல் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1. விடுகதை | - மரத்திற்கு ஆதாரம் | விதை |
| 2. திருநெல்வேலி | - பயிர்களைப் பாதுகாக்கும் | ------------ |
| 3. நகர்ப்புறம் | - விரலின் மணிமகுடம் | ------------ |
| 4. இமயமலை | - உண்கலம் | ------------ |
| 5. உருண்டை | - நமது அடிப்படைத்தேவைகளுள் ஒன்று | ------------ |

### 3. வரிசைமாறியுள்ள தொடர்களை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

1. மூதாட்டி ஒருவர் மரத்தடியில் அமர்ந்திருந்தார்.
2. ஊர்த்தலைவர் நிருவாகி ஒருவரை நியமிக்க எண்ணினார்.
3. ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ந்து ஏற்றனர்.
4. தர்மராசு, செல்வநாயகம் இருவரும் நிருவாகி பதவிக்கு விருப்பம் தெரிவித்தனர்.
5. செல்வநாயகம் நிருவாகியாகத் தகுதியானவர் என்றார் ஊர்த்தலைவர்.

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

4. கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்து சரியான விடையைக் கண்டுபிடிக்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ணி | ர | த | அ | சை | வ | லூ |
| ட் | லை | ழெ | மை | இ | ல் | க |
| ஆ | ரா | ய் | ச் | சி | வி | வா |
| பு | ம் | க | ச | ன் | ல் | து |
| சி | ன் | கௌ | ர் | சி | ஓ | மெ |
| ன் | த | ந் | வே | ப | ரி | வு |

**இடமிருந்து வலம்**

1. அறிவியல் அறிஞர்கள் செய்வது ............ ஆராய்ச்சி ............
2. இரக்கம் என்ற சொல்லை இப்படியும் கூறலாம் ............

**வலமிருந்து இடம்**

1. உலகின் மற்றொரு பெயர் ............
2. மக்களைக் காப்பவர் ............
3. நவதானிய வகைகளுள் ஒன்று ............

**மேலிருந்து கீழ்**

1. அரசரின் ஆலோசகர் ............
2. கொல்லிமலை நாட்டின் அரசன் ............

**கீழிருந்து மேல்**

1. இது வந்திட பத்தும் பறக்கும் ............
2. விரைந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் ............
3. இதைக் கேட்டால் மனம் மயங்கும் ............

5. கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( கண்ணுங்கருத்துமாக, இன்பமும் துன்பமும், ஈடும்எடுப்புமாக, அடுக்கடுக்காக, கீரியும் பாம்பும், )

1. பானைகள் ........................................ வைக்கப்பட்டிருந்தன.
2. நேற்றுவரை ...................... போல் இருந்தவர்கள் இன்று நட்புடன் பழகுகிறார்கள்.
3. தேர்வில் ......... படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்.
4. வாழ்வில் ................................. உண்டு. அதனைக் கண்டு நாம் சோர்வடையக்கூடாது.
5. மன்ற விழாக்களில் எங்கள் ஆசிரியரின் பேச்சு ............ இருக்கும்.

## தெரிந்து கொள்வோம்

பிறநாட்டு நாணயங்களை அறிவோமா?

| | | |
|---|---|---|
| இந்தியா | - | ரூபாய் |
| அமெரிக்கா | - | டாலர் |
| இங்கிலாந்து | - | பவுண்டு |
| மலேசியா | - | ரிங்கிட் |

## செயல் திட்டம்

- நமது நாட்டுச் சின்னங்களின் படங்களைத் தொகுத்து அவற்றைப் பற்றி எழுதித் தொகுப்பேடு உருவாக்குக.
- கடையெழு வள்ளல்களைப் பற்றிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.
- நமது மாநிலச்சின்னங்களின் படங்களைத் தொகுத்து அவற்றைப் பற்றி எழுதி வருக.

## குறிப்புச்சட்டகத்தைப் பயன்படுத்திச் சிறு சிறு கட்டுரை எழுதுதல்

கட்டப்பட்ட உரையே கட்டுரை, குறிப்பிட்ட தலைப்பில் அமையும் செய்திகளைத் தொகுத்து, கட்டுரை எழுதுவதற்கு முன் நினைவில் கொள்ள வேண்டியவற்றை அறிந்துகொள்வோம்.

- ✓ கட்டுரை எழுதுவதற்குரிய தலைப்பு
- ✓ தலைப்பு சார்ந்த செய்திகளைத் திரட்டுதல்
- ✓ கட்டுரையை விளக்கும் குறிப்புச்சட்டகம் உருவாக்குதல்
- ✓ முன்னுரை, பொருளுரை, முடிவுரை என அமைத்தல்
- ✓ பொருளுரையில் சிறு சிறு உள்தலைப்புகள் இடுதல்
- ✓ பொருத்தமான பழமொழி, மேற்கோள், உவமை, சான்றோர் கூற்று, பாடல் பயன்படுத்துதல்
- ✓ சொற்களுக்கிடையே இடைவெளி, நிறுத்தற்குறிகள் பயன்படுத்துதல்
- ✓ சிறு சிறு பத்தியாகப் பிரித்தல், வரிசைப்படுத்துதல்
- ✓ கையெழுத்துத் தெளிவு, அழகு, சுருக்கமாக விளக்குதல்
- ✓ குறித்த அளவுக்குள் கட்டுரை எழுதுதல்

குறிப்புச் சட்டகம் என்பது, கட்டுரையில் இடம்பெறும் செய்திகளைச் சிறு சிறு தலைப்புகளில் விளக்குவதாகும். அந்தத் தலைப்புகளைக் கொண்டே, கட்டுரையை விரிவாக எழுதிட இயலும். கட்டுரையின் முழுப்பொருளையும் விளக்குவதாகக் குறிப்புச்சட்டகம் அமையும்.

கீழே மாதிரிக்காக ஒரு குறிப்புச்சட்டகம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு, கட்டுரையை விரித்து எழுதும் முறையை அறிந்து கொள்க.

### கடையெழு வள்ளல்களின் சிறப்பு

### குறிப்புச் சட்டகம்.

- முன்னுரை
- கொடைத்திறன்
- வள்ளல்களின் தொகுப்பு
- ஆட்சியின் சிறப்புகள்
- கொடைத்திறத்தால் விளையும் பயன்கள்
- முடிவுரை

இது போன்று, நீங்கள் எழுத விரும்பும் கட்டுரைக்குக் குறிப்புச் சட்டகம் உருவாக்கிக் கட்டுரை எழுத முயலுக.

இயல்
இரண்டு
அறம் / தத்துவம் / சிந்தனை

கவிதைப்பேழை

# 1. கல்வியே தெய்வம்

**நுழைவாயில் :** கேடில் விழுச்செல்வம் கல்வி. 'கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்'. மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும், அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. கல்வியின் பெருமைகளைப் பற்றி இப்பாடலில் நாம் அறிவோம்.

அன்னையும் தந்தையும் தெய்வம் - இதை
அறிந்திட வேண்டும் நீயும்
கண்ணெனும் கல்வியும் தெய்வம் - இதைக்
கருத்தினில் கொள்வாய் நீயும்
பொன்னையும் மண்ணையும் விஞ்சும் - அந்தப்
புகழும் நம்மைக் கொஞ்சும்
நன்மையும் மென்மையும் தோன்றும் - நல
நயமதும் நம்மை அண்டும்
கல்வியைக் கற்றிட வேண்டும் - அதைக்
கசடறக் கற்றிட வேண்டும்
வல்லமை பெற்றிட வேண்டும் - நல்
வளமதை எட்டிட வேண்டும்
கற்றிடக் கற்றிட யாவும் - நல்
கணக்கென நெஞ்சில் கூடும்
வெற்றிகள் ஆயிரம் சேரும் - புகழ்
வெளிச்சமும் மேனியில் ஊறும்
விண்ணையும் அளந்திட வைக்கும் - நம்மை
விடியலாய் எழுந்திட வைக்கும்
திண்மையும் வசப்பட வைக்கும் - மனதில்
தெளிவினைச் செழித்திட வைக்கும்

- பாரதிசுகுமாரன்

### சொல்பொருள்

| | | | |
|---|---|---|---|
| விஞ்சும் | - மிகும் | அண்டும் | - அடையும் |
| கசடற | - குற்றம் நீங்க | ஊறும் | - சுரக்கும் |
| திண்மை | - வலிமை | செழித்திட | - தழைத்திட |
| நயம் | - உணர்வு | வல்லமை | - வலிமை / பலம் |

### பாடலின் பொருள்

அன்னையும், தந்தையும் தெய்வம். அதுபோல் நாம் கண்ணெனக் கற்கும் கல்வியும் தெய்வமாகும். பொன்னையும் மண்ணையும் விட மேலானகல்வி நமக்கு எல்லாப் புகழையும் பெற்றுத் தரும். கல்வி கற்றால் நன்மையும், மேன்மையும், நல்லருளும் நம்மை வந்தடையும். ஆகவே கல்வியை குற்றம் இல்லாமல் கற்க வேண்டியது அவசியம். ஆற்றலையும் நல்ல வலிமையையும் வளத்தையும் பெற்றிட வேண்டும். நாம் கற்றிடக் கற்றிட யாவும் மனக்கணக்கைப்போல் நெஞ்சில் பதியும். வெற்றி கிட்டும். புகழ் தோன்றும். விண்ணையும் அளக்கச் செய்யும். நம்மை விடியலாய் எழச்செய்யும் வலிமையைச் சேர்க்கும். மனதினில் தெளிந்த நல்லறிவை வளரச் செய்யும்.

### கற்பவை கற்றபின்

- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- கல்வியின் சிறப்பை உம் சொந்த நடையில் கூறுக.
- கல்வியின் சிறப்பை உணர்த்தும் வேறு பாடல்களை அறிந்து வந்து பாடுக.
- கல்வியினால் மேன்மை அடைந்தவர்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. கசடற - இச்சொல்லின் பொருள் ____________________

   அ) குற்றம் நீங்க ஆ) குற்றமுடன் இ) தவறான ஈ) தெளிவின்றி

2. வளமதை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) வள + மதை ஆ) வளமை + அதை
   இ) வளம் + அதை ஈ) வளம் + மதை

3. வெளிச்சம் - இச்சொல்லின் எதிர்ச்சொல் ..................................

அ) இருட்டு  ஆ) வெளிப்படையான  இ) வெளியில்  ஈ) பகல்

**ஆ. ஒன்று போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.**

| முதலெழுத்து | இரண்டாமெழுத்து |
| --- | --- |
| அன்னையும் | நன்மையும் |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |

**இ. எதிர்ச்சொல் எழுதுக.**

1. நன்மை x ------------------------  2. வெளிச்சம் x ------------------------
3. புகழ் x ------------------------  4. தோன்றும் x ------------------------
5. வெற்றி x ------------------------  6. தெளிவு x ------------------------

**ஈ. "உம்"என முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

அன்னையும் தந்தையும் ----------------------------------------

---------------------------------------- ----------------------------------------

---------------------------------------- ----------------------------------------

**உ. எல்லா கேள்விகளுக்கும் ஒரே விடை என்னவென்று கண்டுபிடியுங்கள்.**



இயல் இரண்டு



# 2. நீதியை நிலை நாட்டிய சிலம்பு

## முன்கதைச் சுருக்கம் :

சிலம்பு காரணமாக உருவான கதை ஆனதால் இது சிலப்பதிகாரம் என ஆயிற்று. இந்நூல் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. சிலப்பதிகாரம் பாட்டுடைத்தலைவனாகக் கோவலன் என்ற குடிமகனைக் கொண்டிருப்பதால் இதனைக் "குடிமக்கள் காப்பியம்" என்று கூறுவர். இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் என்பவர் ஆவார். இவர் புகழ் பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகிறது.

வணிகம் செய்தற்பொருட்டு கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியின் வீட்டில் தங்கினான். கோவலன் தன் மனைவி கண்ணகியின் விலை மதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றை விற்று வர கடைவீதிக்கு எடுத்துச் சென்றான். சிலம்பை பரிசோதித்த, பாண்டிய மன்னனின் பொற்கொல்லன், காணாமல் போன அரசியின் காற்சிலம்பு இதுதான் என்று கூறினான். அப்பொற்கொல்லனே அரசியின் சிலம்பை திருடியவன் ஆவான். அவன் செய்த திருட்டை மறைக்க பழியை கோவலன் மீது சுமத்தினான். பொற்கொல்லன் கூறியதை சற்றும் ஆராயாமல் கள்வனைக் கொன்று காற்சிலம்பைக் கொண்டு வா! என்று தீர்ப்பு அளித்தான் மன்னன். கோவலன் கொலையுண்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்து கொண்ட கண்ணகி நீதி கேட்டு அரண்மனைக்குச் சென்றாள். தன்னிடமிருந்த மற்றொரு காற்சிலம்பைக் கொண்டு, தன் கணவன் கள்வனல்லன் என்பதை அரசவையில் எடுத்துரைக்கிறாள். அரசனுக்கும், கண்ணகிக்கும் நடக்கும் உரையாடலே இங்கு பாடமாக அமைந்துள்ளது.

**கண்ணகி** : வாயிலோயே! வாயிலோயே! ............. அறிவு கீழிறங்கிப் போன, நெஞ்சத்தில் அறமே இல்லாத, அரச நீதியற்ற, செங்கோல் தவறிய கொடுங்கோல் மன்னனுடைய வாயிற்காவலனே! ஒரு சிலம்பினை

ஏந்திய கையுடன் தன் கணவனை இழந்தாள் ஒருத்தி அரண்மனை வாயிலில் உள்ளாள் என்பதை உன் மன்னனிடம் சென்று அறிவிப்பாய்!

வாயிற்காப்போன் : கண்ணகியின் சினங்கொண்ட தோற்றம் கண்டு அஞ்சியவனாய் விரைந்து சென்று அரசே! அரசே! நம் அரண்மனை வாயிலின் முன், அழுத கண்களோடும் தலைவிரி கோலத்துடனும் ஒரு பெண் வந்து நிற்கிறாள்.

பாண்டிய மன்னர் : அப்படியா? அந்தப் பெண்ணிற்கு என்ன துயரமோ? கேட்டாயா?

வாயிற்காப்போன் : கேட்டேன், மன்னவா! அதைப் பற்றி உங்களிடம் தான் கூற வேண்டும் என்கிறாள். அவள் தங்களிடம் நீதி கேட்டு வந்திருப்பதாகக் கூறுகிறாள்.

பாண்டிய மன்னர் : நீதி கேட்டு வந்திருக்கிறாளா? சரி அந்தப் பெண்ணை வரச்சொல்.

(ஆன்றோர்களும், சான்றோர்களும் நிறைந்திருக்கும் அவையிலே நடுநாயகமாய் மன்னர் வீற்றிருக்க, அரசவைக்குள் புயலென நுழைகிறாள் கண்ணகி. )

பாண்டிய மன்னர் : தனது ஆணைப்படி தன் முன் வந்து நின்ற கண்ணகியை நோக்கி அரசன், “நீர்ஒழுகும் கண்களுடன் எம்முன் வந்திருப்பவளே! நீ யார்?” உனக்கு என்ன வேண்டும்?

கண்ணகி : உண்மை தெளியா மன்னனே! சொல்கிறேன், கேள். தேவர்களும் வியக்கும்படி ஒரு புறாவுக்காகத் தன் உடலையே தந்த “சிபி” சக்கரவர்த்தியைப் பற்றி நீ அறிவாயா? ஆராய்ச்சி மணியை இடைவிடாது ஒலித்த ஒரு பசுவின் துயரைப் போக்க வேண்டி தானே தேரை ஓட்டிச் சென்று தன் அரும்பெரும் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று பசுவிற்கு நீதி கிடைக்கச் செய்த செங்கோல் வேந்தன் “மனுநீதிச் சோழன்”-ஐப் பற்றி அறிவாயா?

பாண்டிய மன்னர் : பெண்ணே! நான் கேட்ட கேள்விக்கான பதிலை விடுத்து நீ வேறு எதை எதையோ கூறிக் கொண்டிருக்கிறாய்.



**கண்ணகி** : வணிகம் செய்து வாழ்தலை விரும்பி ஊழ்வினை காரணமாக உனது பெரும் நகரமாகிய மதுரை வந்தோம். தொழில்செய்ய முதல் வேண்டி என்னுடைய காற்சிலம்புகளுள் ஒன்றினை விற்பனைசெய்ய எடுத்து வந்த பொழுது, உன்னால் கொலைக்களப்பட்ட கோவலன் என்பான் மனைவி ஆவேன். என் பெயர் கண்ணகி. இழப்பின் அருமை தெரியாத மன்னனே! என் நிலை அறியாமல் தானே இப்படிப் பேசுகிறாய்.

**பாண்டிய மன்னர்** : ஓ! இப்போது புரிகிறது. அந்தக் கோவலன் மனைவியா நீ?

**கண்ணகி** : தேரா மன்னா! போதும் நிறுத்து. என் கணவனை இகழ உனக்கு என்ன தகுதி இருக்கிறது? குற்றமற்ற என் கணவனை ஆராயாமல் அநியாயமாகக் கொன்று விட்டாயே, நீ செய்தது தகுமா?

பாண்டிய மன்னர் : போதும் நிறுத்து! பெண்ணே. கள்வனைக் கொல்வது செங்கோல் முறைமைக்கு ஏற்றதாகும். முறைதவறாத அரசநீதியே ஆகும். இதை அனைவரும் அறிவார்களே, உனக்குத் தெரியாதா என்ன?

கண்ணகி : நல்லமுறையில் ஆராய்ந்து பார்த்துச் செயல்படாத கொற்கை வேந்தனே! தவறிழைத்தவர்களைத் தண்டித்தல் தகுதியுடைய மன்னனுக்கு உரியது என்பதை நானும் அறிவேன். ஆனால், நீ கூறுவது போல என் கணவன் கள்வனல்லன். அவனிடம் இருந்த சிலம்பும், அரசிக்குரிய சிலம்பன்று; இணைச்சிலம்பு இதோ என்னிடம் உள்ளது.

பாண்டிய மன்னர் : நல்லது! நீ கூறியவை நல்ல சொற்கள் எமது சிலம்பு முத்துக்களை உள்ளிடுபரல்களாக உடையது.

கண்ணகி : கொற்கை வேந்தனே! என் காற்பொற்சிலம்பு மாணிக்கக்கற்களை உள்ளிடுபரல்களாக உடையது.

பாண்டிய மன்னர் : பெண்ணே! நீ சொல்வது உண்மை தானா? ஆன்றோர் நிறைந்த அவைதனிலே அனைவருக்கும் உண்மையை உணர்த்துகிறேன். யாரங்கே? கோவலனிடமிருந்து பெற்ற அச்சிலம்பைக் கொண்டு வா!

( சிலம்பைப் பெற்ற மன்னர், அதைக் கண்ணகியிடம் கொடுக்கிறார். )

பாண்டிய மன்னர் : பெண்ணே! இதோ, உன் கணவனிடமிருந்து கைப்பற்றிய கால்சிலம்பு.

( கண்ணகி விரைந்து சென்று அச்சிலம்பினைக் கையில் எடுத்து மன்னன் முன்னிலையில் தரையில் போட்டு உடைக்கிறாள். அச்சிலம்பு உடைந்து அதனுள் இருந்த மாணிக்கப்பரல்கள் சிதறுண்டு அரசனுடைய முகத்தில் பட்டுக் கீழே தெறித்தன. )

கண்ணகி : நீதி தவறாதவன் என்று உன்னைக் கூறிக் கொள்ளும் மன்னா, ஒரு தவறும் செய்யாத என் கணவனைக் கொன்றது உன் அறநெறிக்கு இழுக்கு என்பதை உணர்ந்தாயா?

பாண்டிய மன்னர் : பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் ஆயுள்

ஆ! தவறிழைத்து விட்டேனே! பிறர்சொல் கேட்டு பெரும் பிழை செய்தேனே! யானோ அரசன் யானே கள்வன். என் குலத்தில் எவரும் செய்யாத பழிச் சொல்லுக்கு ஆளாகிவிட்டேனே! இனி மேலும் நான் உயிருடன் இருத்தல் தகுமா? இனி எனக்கு வெண்கொற்றக் குடை எதற்கு? செங்கோல் தான் எதற்கு? என் வாழ்நாள் இன்றோடு முடியட்டும்.

பாண்டிய மன்னர், தவற்றை உணர்ந்ததும், தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்தினான். அரசி மாதேவியும் தன் கணவனுடைய திருவடிகளைத் தொழுது வீழ்ந்தாள், உயிர் துறந்தனர்.

## கற்பவை கற்றபின்

- பாடத்திலுள்ள உரையாடலை நாடகமாக நடித்துக் காட்டுக.
- தமிழ் இலக்கிய கதைகளைக் கூறி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் ..........................

   அ) மனுநீதிச்சோழன்    ஆ) பாண்டியன்

   இ) சிபி மன்னன்    ஈ) அதியமான்

2. கண்ணகியின் சிலம்பு .................................... ஆல் ஆனது.

   அ) முத்து    ஆ) மாணிக்கம்

   இ) பவளம்    ஈ) மரகதம்

3. அறநெறி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

   அ) அறி + நெறி    ஆ) அற + நெறி

   இ) அறம் + நெறி    ஈ) அறு + நெறி

4. கால் + சிலம்பு - இச்சொற்களை சேர்த்து எழுதக் கிடைப்பது .......

அ) காற்சிலம்பு  ஆ) கால்சிலம்பு

இ) கற்சிலம்பு  ஈ) கல்சிலம்பு

5. தண்டித்தல் - இச்சொல்லின் பொருள் ..................................

அ) புகழ்தல்  ஆ) நடித்தல்

இ) தண்டனை வழங்குதல்  ஈ) ஒறுத்தல்

**ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. அ + ஊர் = ..................................................
2. தகுதி + உடைய = ..................................................
3. தேர் + கால் = ..................................................
4. அந்த + பெண் = ..................................................
5. நிறைந்து + இருக்கும் = ..................................................

**இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. கள்வனல்லன் = ..................................................
2. செங்கோல் = ..................................................

**ஈ. கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1. அறியாமை  2. நீதி  3. சிலம்பு  4. மாணிக்கம்

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கண்ணகியின் ஊர் எது?
2. கண்ணகியின் கணவர் பெயர் என்ன?
3. புகார் நகரின் சிறப்புகள் யாவை?
4. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?
5. பாண்டிய மன்னனின் சிலம்பு எவற்றால் ஆனது?
6. கோவலன் கள்வனல்லன் என்பதைக் கண்ணகி எவ்வாறு நிரூபித்தாள்?
7. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக்குடை வீழக்காரணமென்ன?

**ஊ. சிந்தனை வினா.**

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" - இந்தக் குறள் கருத்து யாருக்குப் பொருந்தும்? கண்ணகிக்கா ? பாண்டிய மன்னருக்கா? சிந்தித்து விடை தருக.

# 3. காணாமல் போன பணப்பை

**நுழைவாயில் :**

- "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற கருத்தை வலியுறுத்துதல்
- நேர்மையாக இருப்பதன் அவசியத்தைக் கற்றுக் கொள்ளுதல்
- அற வழி நடத்தலின் இன்றியமையாமை பற்றி தெரிந்து கொள்ளுதல்

புதுவயல் என்ற ஊரில் வைரவன் என்ற வியாபாரி வாழ்ந்து வந்தான். அவ்வூர் விவசாயிகளிடம் அறுவடை செய்த நெல்லை வாங்கி நகர்ப்புறங்களில் நல்ல விலைக்கு விற்று அதிக இலாபம் சம்பாதித்து வந்தான். விரைவில் பெரும் செல்வந்தன் ஆனான். ஒரு நாள் அதிகப்படியான நெல்மூட்டைகளை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு தேவகோட்டை என்ற பெருநகருக்குச் சென்றான். நெல் தரமானதாக இருந்ததால் நல்ல விலைக்கு விற்பனையானது. பை நிறைய பணமும் சேர்ந்தது.



வியாபாரி வைரவனுக்கு மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை. இந்தப் பணத்தை முதலீடு செய்து அதிக விளைச்சலைத் தரக்கூடிய வயல்களை வாங்கி “நாமே விவசாயம் செய்தால் இன்னும் நிறைய வருமானம் கிடைக்குமே! இன்னும் பெரிய செல்வந்தன் ஆகிவிடலாம்” என்று கற்பனையில் மிதந்தான்.

காலையிலிருந்து நெல் விற்பனைக்காக அலைந்ததாலும், கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாது நெல் மூட்டைகளைத் தூக்கிச் சுமந்ததாலும் வியாபாரி வைரவன் களைப்புற்றார். பணப்பையுடன் வண்டியில் வீடு திரும்பினார். வரும் வழியில் சற்று அசந்து தூங்கிவிட்டார். புதுவயலில் அவர் வீட்டின் முன் அவரது வண்டி நின்றது. வண்டியோட்டி வியாபாரியை எழுப்பினான். தூக்கக் கலக்கத்துடன் இறங்கிய வியாபாரி தன் பணப்பையைத் தேடினான். அது வழியில் எங்கேயோ விழுந்து விட்டதை உணர்ந்தான். வீட்டிற்கு வந்த பிறகு தான் பணப்பை காணாமல் போனது அவனுக்குத் தெரிந்தது. பணப்பை தொலைந்ததை எண்ணி எண்ணி அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் நிலையில் இருந்தான்.



மறுநாள்தன் நாட்டுச் சிற்றரசனிடம் சென்று முறையிட்டான். அரசே! நான் நேற்று தேவகோட்டையில் நெல் விற்பனையை முடித்து விட்டு பொழுது சாய்ந்ததும் புதுவயலிலுள்ள எனது வீட்டிற்கு வந்தேன். அது சமயம் வண்டியில் கொண்டு வந்த என் பணப்பையை வரும்வழியில் தொலைத்துவிட்டேன். அருள்கூர்ந்து இதை தண்டோரோ போட்டு ஊர் மக்களுக்கு அறிவிக்க வேண்டுகிறேன். அதை எடுத்தவர்கள் திருப்பிக் கொடுத்தால் அதிலிருந்து நாற்பது பணம் சன்மானமாகக் கொடுத்து விடுகிறேன் என பணிவுடன் வேண்டினான். அரசனும் அவ்வாறே ‘பறை’ அடித்து நாட்டு மக்களுக்கு அறிவித்தான்.

பறை அறிவித்த மூன்றாம்நாள், வயதான மூதாட்டி ஒருவர், தான் சாலையோரத்தில் கண்டெடுத்த பணப்பையை அரசனிடம் ஒப்படைத்தாள். அம்மூதாட்டியின் நேர்மையையும், மன்னன் வியாபாரி அறிவித்தபடி தக்க வெகுமதியை அவளுக்கு அளிக்கும்படி ஆணையிட்டான். பணப்பையை பெற்றுக் கொண்ட வியாபாரி பணம் சரியாக இருக்கிறதா என்று எண்ணிக் கொண்டிருந்தான். அவன் பையில் வைத்திருந்த பணம் அப்படியே இருக்கக் கண்டான். இருந்தாலும் பேராசை கொண்ட அந்த வியாபாரி அரசனின் ஆணையைக் கேட்டுத் திடுக்கிட்டான். தான் அரசனிடம் வாக்களித்தபடி சன்மானம் கொடுக்க அவன் மனம் ஒப்பவில்லை. தான் சொன்ன சொல்லை நிறைவேற்ற விரும்பவில்லை.

எனவே அவன், மன்னா! என் பணப்பையில் நான் அதிகப்பணம் வைத்திருந்தேன். இப்பையில் குறைவாக இருக்கிறது. தங்கள் முன்னிலையில் தான் அவற்றை எண்ணிச் சரிபார்த்தேன் என்று பொய் சொன்னான். வியாபாரியின் பேராசையையும், சூழ்ச்சியையும் அறிந்து கொண்ட அரசனுக்குக் கோபம் வந்து விட்டது. அந்த வியாபாரிக்கு சரியான பாடம் கற்பிப்பதுடன் தகுந்த தண்டனை அளிக்கவும் முடிவு செய்தார். மன்னன், அப்படியா! வியாபாரி, உன் பையில் அதிகப்பணம் இருந்தது, இல்லையா? ஆனால் இந்த மூதாட்டி கண்டெடுத்துக் கொடுத்த பையில் பணம் குறைவாக இருப்பதாக எண்ணிப் பார்த்த நீயே கூறுகிறாய்! இப்போது நீ தொலைத்து விட்டதாக முறையிட்ட உன்னுடைய பணப்பை இதுவல்ல என்று உறுதியாகிறது. எனவே, இது உன் பை இல்லை ; வேறு யாருடையதோ தெரியவில்லை. பணத்திற்குச் சொந்தக்காரன் வந்து கேட்கும் வரை என்னிடமே இருக்கட்டும். நீ இவ்விடத்தை விட்டுப் போகலாம் என ஆணையிட்டான்.

அவன் சென்ற பின், பணத்தை வைத்திருப்பவன் மட்டுமே பணக்காரன் அல்லன். சொன்ன சொல்லை மறவாது மற்றவர்களுக்கும் பெருந்தன்மையுடன் கொடுக்கும் உள்ளம் கொண்டவனே உண்மையான பணக்காரன் என்று கூறிய அரசன், மூதாட்டியின் நேர்மையைப் பாராட்டிப் பணப்பையை அவருக்கே பரிசளித்தான். கஞ்சத்தனமும் வஞ்சக எண்ணமும் கொண்ட வியாபாரி தன் பணத்தை இழந்ததுடன் மற்றவர்களின் இகழ்ச்சிக்கும் கேலிப்பேச்சுக்கும் ஆளானான்.

நீதி : "நேர்மை நன்மை தரும்."

## கற்பவை கற்றபின்

- நேர்மையால் ஒருவர் உயர்வதாக ஒரு பக்கஅளவில் கதை எழுதுக.
- "காணாமல் போன பணப்பை" - இக்கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.
- "காணாமல் போன பணப்பை" கதையை உரையாடல் வடிவில் எழுதுக.
- நீ இது போன்ற ஏதேனும் ஒரு சூழ்நிலையைக் கடந்ததுண்டா? நேர்மையாக எங்காவது நடந்ததுண்டா? கலந்துரையாடுக.

## மதிப்பீடு

**அ. பொருள் கூறுக.**

1. அரசன் 2. சன்மானம் 3. சிந்தை 4. தண்டோரா

**ஆ. சேர்த்து எழுதுக.**

1. பணம் + பை 2. முரசு + அறைந்து 3. கூறி + இருந்தான்

**இ. எதிர்ச்சொல் எழுதுக.**

1. வாங்கி 2. நிறைய 3. அவன் 4. நீதி 5. நியாயம்

**ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பணப்பை கிடைத்து விட்டால் வணிகன் எவ்வளவு சன்மானம் வழங்குவதாகக் கூறினான்?
2. பணப்பையைப் பெற்றுக் கொண்ட வணிகன் என்ன கூறினான்?
3. வணிகனுக்கு சிற்றரசர் எவ்வாறு பாடம் கற்பித்தார்?
4. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதி என்ன?
5. இக்கதையில் நீ விரும்பிய கதைமாந்தர் யார்? ஏன்?

**உ. சிந்தனை வினா.**

1. நீங்கள் அரசராக இருந்தால், இந்தச் சிக்கலுக்கு என்ன முடிவெடுப்பீர்கள்?

இயல்
இரண்டு

கற்கண்டு

# 4. மயங்கொலிச்சொற்கள்

தமிழில் சிலசொற்கள் கிட்டத்தட்ட ஒரே ஒலிப்பினைக் கொண்டவைகளாகவும், முற்றிலும் வேறுபட்ட பொருள் கொண்டவைகளாகவும் காணப்படும்.

இவ்வகையான சொற்கள் ஒலிக்கப்படும் போது நுண்ணிய வேறுபாடுகளையே மட்டுமே கொண்டிருப்பதால் எது சரி எது தவறு என மயங்க வைப்பனவாக இருக்கும். அதனாலேயே இவை **மயங்கொலிச் சொற்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

கயல் : டேய் வேந்தன், அந்த தவலையைக் கொண்டு வா!

வேந்தன் : இந்தா கயல் .......

கயல் : ஆ..........! ஆ .........! என்னடா இது. தண்ணீர் பிடிக்க தவலையைக் கேட்டா, நீ தத்தி தத்தி ஓடும் தவளையைக் கொண்டு வந்திருக்கிறியே?

வேந்தன் : ஓ! தவளையைக் கேட்கவில்லையா! தவலையைக் கேட்டாயா! மன்னித்துவிடு கயல்.

கயல் : சரி இப்போ எதுக்கு குக்கரை உற்று பார்த்துக்கிட்டு இருக்கே?

வேந்தன் : அம்மா தான் சொன்னாங்க, குக்கரில் இருந்து ஒளி வரும்னு பார்த்துக்கிட்டு இருக்கேன்.

கயல் : வேந்தா குக்கரில் இருந்து ஒலி (விசில் சத்தம்) தான் வரும். ஒளி (வெளிச்சம்) விளக்கிலிருந்து தான் வரும்.

வேந்தன் : ஓ! ...அப்படியா! சரி ... சரி .... இந்தா நீ வளை வாங்கிட்டு வரச் சொன்னியே இந்தா வளை.

கயல் : என்னடா இது! நான் கையில் போடற வளையச் சொல்லவில்லை. மீன் பிடிக்கும் வலையைச் சொன்னேன்.

வேந்தன் : அடடா! சரி நான் அடுத்த முறை வாங்கி வருகிறேன். எப்போதும் தப்புத்தப்பாக கூறுகிறாயே!

கயல் : உன் சட்டையைப் பார்! கறை படிந்தது போல் உள்ளதே வேந்தா.

வேந்தன் : கயல் என்ன? கரையா! நான் ஏரிக்குச் செல்லவில்லையே.

கயல் : வேந்தா நான் கறை (அழுக்கு, அசுத்தம்) பற்றி சொன்னேன். நீ ஏரிக்கரையினைச் சொல்கிறாய். தயவு செய்து மயங்கொலிச் சொற்களை படி வேந்தா. மிகவும் அவசியமான ஒன்று மயங்கொலிச் சொற்கள்.

மேற்கண்ட உரையாடலை படித்தீர்களா! இவை, படித்துச் சிரிப்பதற்கு மட்டுமல்ல. சிந்திப்பதற்கும்தான். நாம் பேசும்போதும் எழுதும்போதும் ஏற்படுகின்ற ஒலிப்புப் பிழைகள் தாம் இவை. நாம் பொருளைப் புரிந்து கொள்வதில் குழப்பம் ஏற்படும். இதனைத் தவிர்க்க, நாம் தெளிவாகவும், சரியாகவும் ஒலித்துப் பழகவேண்டும். அப்படியான எழுத்துகளை கற்போம். வாருங்கள்.




இந்த எழுத்துகளை நாம் தெளிவாகவும் சரியாகவும் திரும்பத் திரும்ப ஒலித்துப் பழக வேண்டும். பொருள் வேறுபாடு உணர வேண்டும். அப்போது தான் பிழையைத் தவிர்க்க முடியும்.

## கற்பவை கற்றபின்

- மயங்கொலி எழுத்துகள் இடம் பெறும் சொற்களை அடையாளம் காண்க.
- மயங்கொலிச் சொற்களின் பொருள் வேறுபாடு அறிக.
- மயங்கொலி எழுத்துகள் கொண்ட சொற்களை முறையாக ஒலித்தும் எழுதியும் பழகுக.

## மதிப்பீடு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. சாலையில் பள்ளம் இருந்ததால், ............................ பேருந்தை மெதுவாக ஓட்டிச் சென்றார்.

   அ) ஓட்டுநர் ஆ) ஓட்டுனர் இ) ஓட்டுணர்

2. கடவூருக்குச் செல்ல எந்த .......................... ப்போக வேண்டும்?

   அ) வலியாக ஆ) வளியாக இ) வழியாக

3. கூண்டிலிருந்த ........ யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.

   அ) கிலி ஆ) கிளி இ) கிழி

4. நீரில் துள்ளி விளையாடுகிறது ................ மீன்

   அ) வாளை ஆ) வாலை இ) வாழை

5. தாய்ப்பசு இல்லாமையால் நாளடைவில் கன்று .......... ப்போனது.

   அ) இழைத்து ஆ) இளைத்து இ) இலைத்து

6. கடல் ...............யில் கால் நனைத்து மகிழ்வது அனைவருக்குமே பிடிக்கும்.

   அ) அளை ஆ) அழை இ) அலை

**ஆ. விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை எழுதுக.**

1. பறந்து செல்வது .............................. ( பரவை / பறவை )
2. கடலின் மறுபெயர் ............................. ( பறவை / பரவை )
3. ஆடையில் இருப்பது .......................... ( கரை / கறை )
4. ஆற்றின் ஓரம் ................................ ( கறை / கரை )
5. சுவரில் அடிப்பது ............................. ( ஆனி / ஆணி )
6. மாதத்தில் ஒன்று ............................. ( ஆணி / ஆனி )
7. பெருமையைக் குறிப்பது .................. ( மான் / மாண் )
8. ஒரு விலங்கு .................................. ( மாண் / மான் )
9. உணவைக் குறிப்பது ........................ ( இறை / இரை )
10. கடவுளைக் குறிப்பது ....................... ( இரை / இறை )

## இ. கீழ்க்காணும் தொடர்களை இணைத்து எழுதுக.

1. நடனம் என்பது, ஒரு .................. ( கலை / கழை / களை )
2. சோளம் என்பது, ஒரு .................. ( தினை / திணை )
3. பெட்ரோல் என்பது, ஓர் ................ ( எரிபொருள் / எறிபொருள் )
4. ஒட்டகம் என்பது ஒரு .................. ( விளங்கு / விலங்கு )
5. தென்னை என்பது, ஒரு ................ ( மறம் / மரம் )
6. கம்பு என்பது, ஒரு வகை.............. ( திணை / தினை )
7. டீசல் என்பது ஒரு வகை.............. ( எரிபொருள் / எறிபொருள் )

## ஈ. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கல்வி ......................................................................
2. பணம் ......................................................................
3. நேர்மை ......................................................................
4. இசை ......................................................................

## மொழியை ஆள்வோம் !

### கேட்டல்

- எளிமையான ஓசைநயம் மிக்க பாடல்களைக் கேட்டு மகிழ்க.
- நாடகங்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் வரலாற்று நிகழ்வுகளைக் கேட்டு உங்கள் நடையில் கூறுக.

### பேசுதல்

- ‘நேர்மை’ என்னும் தலைப்பில் பேசுவதற்கு ஏற்ற உரை தயாரிக்க.
- ‘சிலப்பதிகாரம்’ புராணக்கதையில் வரும் கண்ணகியின் வசனத்தை உணர்ச்சி பொங்க பேசிக்காட்டுக.

### படித்தல்

- பேராசை பெருநஷ்டம் என்னும் தலைப்பில், கதை எழுதி அதனை வகுப்பறையில் படித்துக்காட்டுக.
- உனக்குப் பிடித்த அறம் உணர்த்தும் கதையொன்றைப் படித்துக் காட்டுக.

## எழுதுதல்

### 1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. கல்வியைக் குற்றம் நீங்கக் கற்க வேண்டும்.
3. நீதி தவறியவர்களுக்குத் தண்டனை தர வேண்டும்.

### 2. பொருத்தமான சொல்லால் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தினமும் ............. காய்கறிகளும் பழங்களும் உண்பது உடலுக்கு நல்லது.

   அ) இனிப்பான ஆ) சத்தான இ) சுவையான

2. நூல்கள் வாசிப்பதன் மூலம் நாம் பல ......................... அறியலாம்.

   அ) தகவல்களை ஆ) அறிவிப்புகளை இ) விபரங்களை

3. .......................... நீர் தளும்பாது.

   அ) மண்குடம் ஆ) நிறைகுடம் இ) பித்தளைக்குடம்

### 3. பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

நாம் நம்முடைய ஐம்புலன்களையும் அடக்குகிறோமோ இல்லையோ நிச்சயம் நாவை அடக்க வேண்டும். அப்படி அடக்காவிட்டால் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். ‘நுணலும் தன் வாயால் கெடும்’ என்பது பழமொழி. ‘நுணல்’ என்றால் தவளை என்பது பொருள். எந்த பகுத்தறிவும், பேச்சு ஆற்றலும் இல்லாத ஜீவராசி தவளை. அது தன்னுடைய சப்தத்தினால் தன் உயிருக்கே ஆபத்தை விளைவித்துக் கொள்ளும் என்பது பொருள்.

#### வினாக்கள்

1. நாம் எதனை அடக்க வேண்டும்?

   ------------------------------------------------------------

2. பத்தியில் கூறப்பட்டுள்ள பழமொழி என்ன?

   ------------------------------------------------------------

3. நுணல் என்பதன் பொருள் யாது?

   ------------------------------------------------------------

## தமிழோடு விளையாடு

### அ. ஒரு சொல் இரு பொருள்.

1. பால் என்பது இனம்
   பால் என்பது ------------------------
2. காய் என்பது காயவைத்தல்
   காய் என்பது ------------------------
3. மதி என்பது மதித்தல்
   மதி என்பது ------------------------
4. நாண் என்பது வெட்கப்படுதல்
   நாண் என்பது ------------------------

### ஆ. முறை மாறியுள்ள திருக்குறளை முறைப்படுத்தி எழுதுக.

1. துப்பாக்கித் துப்பாய துப்பார்க்குத் துப்பாய
   மழை தூஉம் துப்பார்ககுத்

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

2. உள்ளாறும் சுட்ட நாவினால் வடு
   சுட்டபுண் தீயினால் ஆறாதே

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

3. சேரின் விடும் ஊக்கம் சிறுபடையான்
   உறுபடையான் அழிந்து செல்லிடம்

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

4. பரந்து உலகு இயற்றி இரந்தும் வேண்டின்
   உயிர்வாழ்தல் கெடுக யான்.

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

## இ. புதிருக்கு விடையளி.

1. வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான். அது என்ன? ..............................
2. ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன். ஆனால் நீரை குடிக்க தந்தால் உயிர் விடுவேன். நான் யார்? ..............................
3. முட்டையிடும், குஞ்சு பொரிக்காது. கூட்டில் இருக்கும். கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமை உண்டு. சங்கீதம் தெரியாது. அது என்ன? ..............................

## ஈ. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?

| | | |
|---|---|---|
| நெய்தல்<br>வயது | நெல்<br>வயல் | நெல் வயல் |
| கல்வி<br>கண் | ..............<br>.............. | .............. |
| தலைவன்<br>மீனவர் | ..............<br>.............. | .............. |
| மரகதம்<br>பல்லாண்டு | ..............<br>.............. | .............. |
| பாண்டியர்<br>மனைவி | ..............<br>.............. | .............. |

## தெரிந்து கொள்வோம்

- உலகின் முதல் தத்துவஞானி சாக்ரடீஸ்.
- கணிதத் தத்துவத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியவர் பிளாட்டோ.
- வரலாற்றின் தந்தை ஹெரடோடஸ்.
- புவியியலின் தந்தை தாலமி.
- வேதியியலின் தந்தை இராபர்ட் பாயில்.
- பொருளாதாரத்தின் தந்தை ஜெராமி பென்தம்.
- சுற்றுச்சூழலின் தந்தை எர்னஸ்ட் ஹேக்கல்.
- இந்திய ஏவுகணையின் தந்தை அப்துல்கலாம்.

## செயல் திட்டம்

உனக்கு தெரிந்த சில துறைகளின் தந்தை யார் என கலந்தாய்வு செய்து அவர்களின் புகைப்படத்தையும், அவர்களின் சாதனைகளையும் அட்டைப்படத்தில் ஒட்டி வகுப்பறைக்கு கொண்டு வந்து பகிர்ந்து கொள்க.

## நிற்க அதற்குத் தக...

- கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று அறிந்து கொள்வேன்.
- எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
  எண்ணுவம் என்பது இழுக்கு

  என்ற திருக்குறளின் பொருளை நன்கு உணர்ந்து செயல்படுவேன்
- உண்மை, உழைப்பு, நேர்மை போன்றவை நம் வாழ்வை மேம்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

## கூட்டு விண்ணப்பம் எழுதுதல் - கழிவுநீர்க் கால்வாய் மூட வேண்டி சுகாதாரத் துறைக்கு கூட்டு விண்ணப்பம்.

**அனுப்புநர்:**

ஊர்ப்பொதுமக்கள்,
வள்ளுவர் கிராமம்,
செங்கல்பட்டு மாவட்டம்

**பெறுநர்:**

சுகாதாரத்துறை அலுவலர்,
சுகாதாரத்துறை அலுவலகம்,
வள்ளுவர் கிராமம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

பொருள் : கழிவுநீர்க் கால்வாய் மூடவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய அம்மா / ஐயா,

வணக்கம். செங்கல்பட்டு மாவட்டம், வள்ளுவர் கிராமத்தில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் பொதுமக்கள் நடக்கும் சாலைகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நோய்வாய்பட்டு வருகின்றனர். அந்தக் கழிவுநீர் கால்வாய்களை பாதாளச்சாக்கடை வழியில் செல்லுமாறு வழிவகை செய்து தர பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
ஊர்ப்பொதுமக்கள்,
வள்ளுவர் கிராமம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

# 1. அறநெறிச்சாரம்

**நுழைவாயில் :**

'அறநெறிச்சாரம்' ஒரு தமிழ் நீதி நூல். அறத்தின் வழியைப் பிழிந்து சாரமாகத் தருவதால் இப்பெயர் ஏற்பட்டது. அறநெறி கருத்துகள் அடங்கியுள்ள பாடல் ஒன்றை இங்கு காண்போம்.

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்றும் ஆற்றலும் - காய்விடத்து
வேற்றுமை கொண்டுஆடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை.

- முனைப்பாடியார்

## சொல்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சால | - | மிகவும் | வன்மை | - | வன்சொல் |
| காய்விடத்து | - | வெறுப்பவரிடத்து | தலை | - | முதன்மை |
| சாற்றுங்கால் | - | கூறுமிடத்து | | | |

## பாடலின் பொருள்

குற்றம் ஏற்படாமல் பேசுதல், துன்பங்கள் உண்டான போதும் மனம் தளராமலிருத்தல், தம்மை வெறுப்பவரிடத்தும் வேற்றுமை பாராட்டாத உண்மை நிலை ஆகிய இவை மூன்றும் மிக உயர்ந்த பண்புகளாகும்.

## நூல் குறிப்பு

அறநெறிக் கருத்துகளைக் கொண்டது. வெண்பா வடிவில் இயற்றப் பெற்ற நூல் அறநெறிச்சாரம். இப்பாடல் எளிமையான வழியில் கருத்துகளை சுருக்கமாகவும் புரியும்படியும் அழகாக விளக்குகிறது. இந்நூலை எழுதியவர் முனைப்பாடியார். நமக்கு வந்துள்ள பாடல் 107வது பாடல்.

## ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : முனைப்பாடியார்.
காலம் : 13 - ஆம் நூற்றாண்டு.
ஊர் : தொண்டை மண்டல முனைப்பாடி.
நூலில் உள்ள வெண்பாக்கள் : 226

## கற்பவை கற்றபின்

- பாடலை சரியான ஓசைநயத்துடன் படிக்க.
- பாடலை அடிபிறழாமல் எழுதுக.
- சொற்குற்றம் ஏற்படாமல் மற்றவரிடம் பேசப் பழகுதல்

## மதிப்பீடு

### அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அறநெறிச்சாரம் .................................. வெண்பாக்களைக் கொண்டது.
2. அறநெறிச்சாரம் என்னும் நூலை இயற்றியவர் ..................................

### ஆ. பிரித்து எழுதுக.

1. பொழுதாற்றும் - .................................. + ..................................
2. சொல்லினம் - .................................. + ..................................
3. சொல்லாடல் - .................................. + ..................................

### இ. சேர்த்து எழுதுக.

1. தன் + உடைய - ..................................
2. பேச்சு + தன்மை - ..................................

### ஈ. எதிர்ச்சொல் எழுதுக.

1. வேற்றுமை 2. உண்டு 3. மெய்மை 4. துன்பம் 5. நான்

### உ. பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

.................................., .................................., ..................................

.................................., .................................., ..................................

### ஊ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அறநெறிச்சாரம் பாடலின் ஆசிரியர் யார்?
2. நாம் பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்பு யாது?
3. அறநெறிச்சாரம் - நூல் குறிப்பு தருக.

### செயல் திட்டம்

அறநெறிச்சாரம் ஆசிரியர் பற்றி குறிப்பு எடுத்து மன வரைபடம் எழுதி வகுப்பறைக்குக் கொண்டு வந்து உரையாடுக.

# 2. புதுவை வளர்த்த தமிழ்

மலர்விழியும் அவள் தந்தையும் புதுச்சேரியிலுள்ள பாரதிதாசன் அரங்கத்தைச் சுற்றிப் பார்க்கின்றனர். மலர்விழியும் அவள் தந்தையும் உரையாடிக் கொண்டே வருகிறார்கள்.

**மலர்விழி** : அப்பா அங்கே பாருங்கள்! அந்தப் படத்தில் இருப்பது பாரதிதாசன் தானே! எங்கள் பாடநூலில் இவருடைய படத்தைப் பார்த்திருக்கிறேன்.

**அப்பா** : ஆமாம். அது பாரதிதாசன் படம் தான். இவரைப் புரட்சிக்கவிஞர், பாவேந்தர் எனச் சிறப்பித்துக் கூறுவர். இவர் ஒரு புதுமைக்கவிஞர். புதுவைக்குப் புகழ் சேர்த்தவர். இவர் தமிழாசிரியராக பணி செய்து தமிழ் அறிஞர்கள் பலரை உருவாக்கியவர். இந்திய விடுதலைப் போராளி. இவர் இயற்பெயர் கனகசுப்புரத்தினம்.

**மலர்விழி** : அப்பா, இவர் சுப்ரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் “பாரதிதாசன்” என்று தம் பெயரை மாற்றிக் கொண்டதாக எங்கள் ஆசிரியர் கூறினார்.

**அப்பா** : ஆமாம் மலர்விழி. தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக பாரதிதாசன், அவரது மானசீக குருவாக இருந்த பாரதியாரை கருதினார். பாரதிதாசனுக்கு அவர் பெற்றோர் இட்ட பெயர் “கனகசுப்புரத்தினம்”. இளமையிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தார்.



“எங்கெங்கு காணினும் சக்தியடா!” என்ற பாடலைப் பாரதியார்முன் பாடிக் காட்டி பாரதியாரின் பாராட்டுக்களைப் பெற்றார். பாரதியார் மீது அன்பும், பக்தியும், பற்றும் உடையவர். அதனால் தான் தன் பெயரைப் “பாரதிதாசன்” என்று மாற்றியமைத்துக் கொண்டார்.

**மலர்விழி** : அப்பா, எனக்கொரு சந்தேகம். பாரதியார் புதுச்சேரியைச் சேர்ந்தவர் இல்லையா?

அப்பா : இல்லையம்மா. பாரதியார் எட்டையபுரத்தில் பிறந்தவர். ஆனால் விடுதலைப் போராட்ட காலத்தில் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் புதுச்சேரியில் தங்கி இருந்துள்ளார். இங்கு இருந்தபோது தான் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு ஆகிய முப்பெருங்காவியங்களைப் படைத்தார். அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் அவர் கவிதை எழுதுவது போன்ற சிலையை இங்கு வைத்திருக்கிறார்கள்.

மலர்விழி : இப்போது புரிந்து கொண்டேன். பாரதிதாசனுக்கு “புரட்சிக்கவி” என்ற பெயர் எப்படி வந்தது? யார் அவருக்கு அந்தப் பெயரைக் கொடுத்தார்கள் அப்பா?

அப்பா : பாரதிதாசன் அவர்களுக்கு தந்தைபெரியார் “புரட்சிக்கவிஞர்” என்ற பட்டமும், அறிஞர் அண்ணா “புரட்சிக்கவி” என்ற பட்டமும் வழங்கினர். தமிழின் சிறப்பை, பொதுவுடைமையை, பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன். மலர்விழி நீ அறிந்த பாரதிதாசன் பாடலைப் பாடு.

மலர்விழி : சரி, பாடுகிறேன் அப்பா. “தமிழுக்கும் அமுதென்று பேர் .... அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று இசையுடன் பாடினாள். எண்ணற்ற படைப்புகளை தமிழ்மொழிக்கு வழங்கியுள்ளார். சாதிமறுப்பு, இயற்கை, பெண்விடுதலை போன்ற கருத்துகளை முன்வைத்து நிறையப்பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் பாரதிதாசன் கவிதைகள் என்னும் பெயரில் புத்தகமாக வெளி வந்துள்ளது.

அப்பா : பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், தமிழகஅரசு ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிச் சிறப்புச் செய்கிறது.

மலர்விழி : இங்கே பாருங்கள் அப்பா “இருண்டவீடு” என்று ஒரு புத்தகம் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

அப்பா : இது பாரதிதாசன் எழுதியது. “குடும்பவிளக்கு” என்னும் நூலில் கல்வியின் உயர்வைச் சொன்னவர், “இருண்டவீடு” என்னும் தன் புத்தகத்தில் கல்லாமையின் இழிவைக் கூறுகிறார்.

மலர்விழி : அப்பா, இங்கு வைக்கப்பட்டுள்ள பலநூல்களில் பாவேந்தர் பெயரே இருக்கிறது.

அப்பா : ஆமாம் மலர்விழி. அத்தனையும் பாவேந்தர் பாடியது தான். அழகின்சிரிப்பு, பாண்டியன்பரிசு, தமிழியக்கம், குறிஞ்சித்திட்டு, புரட்சிக்கவி, இசையமுது என 72 நூல்களுக்கு மேல் பாடி, தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மலர்விழி : அப்பா, அதோ பாருங்கள், பக்கத்துவீட்டு மாதங்கி!

அப்பா : அடடே, வாம்மா, மாதங்கி எப்பொழுது வந்தாய்?

மாதங்கி : வணக்கம் மாமா. பள்ளி நாடகத்தில் நடிப்பதற்காகப் பாரதிதாசனின் “பிசிராந்தையார்” தேடிப் படிக்க வந்தேன்.

மலர்விழி : பாரதிதாசன் நாடகங்கள் கூட எழுதியிருக்கிறாரா? அப்பா.

அப்பா : ஆம். 33 நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். மாதங்கி தேடும் “பிசிராந்தையார்” நாடக நூல் “சாகித்ய அகாடமி விருது” பெற்றுள்ளது.

மலர்விழி : மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இவரைப் போன்று வேறுயாரேனும் தமிழ்ச் சான்றோர்கள் புதுவையில் உள்ளனரா? அப்பா.

அப்பா : பலர் இருக்கின்றனர். அவர்களுள் வாணிதாசன், புதுவைசிவம், தமிழ்ஒளி, பிரபஞ்சன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மாதங்கி : வாணிதாசனைப் பற்றிச் சொல்லுங்கள் மாமா.

அப்பா : தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தவர் வாணிதாசன். ரமி என்ற புனைப் பெயரில் எழுதி வந்த இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் எத்திராசலு என்கிற அரங்கசாமி. இவர் பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக்கல்வி பயின்றவர். அத்தொடக்கக் கல்வியே பாடல்புனையும் தமிழுணர்வுக்கும் தொடக்கமாயிற்று.



தமிழ் - பிரெஞ்சு கையகரமுதலி என்ற நூலை வெளியிட்டுள்ளார். பிரெஞ்சு குடியரசுத்தலைவர் இவருக்கு “செவாலியர்” என்ற விருதினை வழங்கியுள்ளார். “கவிஞரேறு”, “பாவலர்மணி” முதலிய பட்டங்களும் வாணிதாசனுக்கு வழங்கப்பட்டன.

மலர்விழி : அவரின் படைப்புகளைப் பற்றிக் கூறுங்கள் அப்பா.

அப்பா : பாரதிதாசன் நடத்திய தமிழ் வகுப்பில் அவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள் கவிஞர் வாணிதாசனும், புதுவை சிவமும் ஆவார். பாரதியார் பிறந்தநாள் அன்று "பாரதிநாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா" என்று வாணிதாசன் பாடிய பாடல் அவருக்கு முதற்பரிசைத் தந்தது.



வாணிதாசனின் "கொடிமுல்லை" என்னும் நூல் சிறப்பு பெற்றது. புதுச்சேரி அரசு இவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் இவரின் நூற்றாண்டு விழாக்களையும், ஆண்டுதோறும் பிறந்தநாள் விழாக்களையும் நடத்தி வருகிறது. தமிழக அரசு, பாவேந்தர் விருதினை இவர்கள் இருவருக்கும் வழங்கிச் சிறப்பித்தது.

மலர்விழி : அப்பா தமிழ்ஒளியைப் பற்றிச் சொல்லுங்கள்.

அப்பா : ஓ! சொல்கிறேனே, இவரின் இயற்பெயர் விஜயரங்கம். "சீறி அடித்துச் சுழன்ற அலைகளில் சிக்கிய ஒரு படகாய் தடுமாறி இளைத்து மடிந்த மகாகவி தன் சரிதம் உரைப்பேன்" என்று பாரதியாரைப் பற்றி பாடியவர் தமிழ் ஒளி.



மலர்விழி : இவரது படைப்புகளைப் பற்றியும், வரலாறு பற்றியும் கூறுங்கள் அப்பா.

அப்பா : இவரும் பாரதிதாசனின் மாணவர். கவிதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப்பாடல்கள் என பல இயற்றியவர். வீராயி, கவிஞனின் காதல், நிலை பெற்ற சிலை என்னும் குறுங்காவியங்களைப் படைத்துள்ளார். இவரது கல்லூரிக் காலத்தில் "சிற்பியின் கனவு" என்னும் மேடை நாடகத்தைப் படைத்துள்ளார். இந்த நாடகம் தான் பின்னாளில் "வணங்காமுடி" என்னும் பெயரில் திரைப் படமாக எடுக்கப்பட்டது. இதில் நடிகர்திலகம் சிவாஜி கணேசன் நடித்துள்ளார். இவரது "விதியோ வீணையோ" என்னும் காவியம், சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய இசை நாடகமாகக் கூறப்படுகிறது.

மாதங்கி : இவரது பாடல்கள் அரசு பாடநூல்களில் கூட இடம் பெற்றுள்ளதாக அறிகிறோம்.

அப்பா : ஆமாம், மாதங்கி. இவரது முன்னும்-பின்னும், அணுவின் ஆற்றல் ஆகிய இரண்டு பாடல்கள் தாம் அவை. அது மட்டுமல்லாது இவரது மாதவி காவியம் என்னும் நூல், கல்லூரிப் பாடநூலாகவும் வைக்கப்பட்டது இவருக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

மாதங்கி: மாமா, இலக்கியங்கள் படைத்தவர்களைப் பற்றி தெரிந்து கொண்டோம். இலக்கண நூல்களை எழுதிய சான்றோர்கள் புதுவையில் இருந்தார்களா?



அப்பா : ஓ! இருந்தார்களே! தமிழில் பிழையின்றி எழுதுவது குறித்த நூல்களைப் படைத்தவர் இலக்கணச் சுடர் இரா.திருமுருகன். இவர் தனித்தமிழ்ப் பற்றால் சுப்ரமணியன் என்ற தம் பெயரைத் "திருமுருகன்" என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

மாதங்கி : உடற்கொடை ஈந்தாரே அவரா மாமா?

அப்பா : ஆமாம். நூறு சொல்வதெழுதல், 17 தமிழ்ப்பாடநூல்கள், வரலாற்று நூல்கள், பாவலர் பண்ணை, என் தமிழ் இயக்கம் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இவரும் சாகித்ய அகாதமி விருது பெற்ற ம.லெனின் தங்கப்பாவும் இணைந்து நடத்திய "தெளிதமிழ்" இதழ் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

மலர்விழி : அப்பப்பா! கேட்கவே மகிழ்ச்சியாக இருக்கிறது.

மாதங்கி : மாமா, சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் பிரபஞ்சனும் புதுவையில் தோன்றியவர் என்று கேள்விப்பட்டேன், உண்மையா?



அப்பா : ஆம். பிரபஞ்சன் பிறந்த ஊர் புதுச்சேரி. இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். கரந்தை கல்லூரியில் தாய்நாட்டைப் போற்றச் செய்தவர். உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர். இதுவரை 46 புத்தகங்களுக்கும் கூடுதலாக எழுதியுள்ளார். 1995 - இல் இவரது வரலாற்றுப் புதினம் "வானம் வசப்படும்" தமிழுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவரது நாடகமான "முட்டை" தில்லி பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் உள்ளது. இவரது சிறுகதைத் தொகுப்பான "நேற்று மனிதர்கள்" பல கல்லூரிகளில் பாடப்புத்தகமாக உள்ளது. இவரது உடல், புதுவை அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது என்பது தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

**மலர்விழி** : அடேயப்பா! புதுவை படைப்பாளிகள் பலர் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். இவர்கள், தமிழால் இமயம் போல் உயர்ந்து நிற்பவர்கள்.

**மாதங்கி** : ஆமாம், மலர்விழி. முத்தமிழ் போற்றும் தமிழ்த் தொண்டாற்றிய நம் முன்னோர்களைப் போற்றி வணங்குவதுடன் நாம் அவர்களின் நூல்களைத் தேடித் தேடிப் படிப்போம்.

**அப்பா** : உங்கள் ஆர்வம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ் வளர்த்த அறிஞர்கள் புதுவையில் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி வேறொரு நாளில் உரையாடுவோம்.

## கற்பவை கற்றபின்

- நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்திச் சரியான ஒலிப்புடன் படித்துக்காட்டுக.
- தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய புதுவை படைப்பாளிகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

## மதிப்பீடு

### அ. சேர்த்து எழுதுக.

1. புரட்சி + கவி - ..........................
2. பாடி + காட்டினார் - ..........................
3. குழந்தை + பாடல்கள் - ..........................
4. மாற்றி + அமைத்து - ..........................
5. இசை + அமுது - ..........................

### ஆ. பிரித்து எழுதுக.

1. சுற்றிப்பார்த்தனர் - .............. + ..............
2. படைத்துள்ளனர் - .............. + ..............
3. முத்தமிழ் - .............. + ..............
4. அமுதென்று - .............. + ..............
5. கவிதைத்தொகுப்பு - .............. + ..............

### இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. அவர் x ..........................
2. உனது x ..........................
3. மேல் x ..........................

4. பலர் x ............................................................

5. முன்னும் x ............................................................

**ஈ. பொருத்துக.**

1. பாரதியார் - பாவலர் பண்ணை
2. பாரதிதாசன் - சிற்பியின் கனவு
3. பிரபஞ்சன் - இருண்ட வீடு
4. தமிழ்ஒளி - குயில் பாட்டு
5. திருமுருகன் - வானம் வசப்படும்

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வாணிதாசனின் இயற்பெயர் ............................................
2. பாரதிதாசனின் இயற்பெயர் ............................................
3. திருமுருகனின் இயற்பெயர் ............................................
4. தமிழ் ஒளி எழுதிய மேடை நாடகம் ....................................
5. தமிழ் ஒளிக்கு பெற்றோர் வைத்த பெயர் ..............................
6. “தமிழுக்கு அமுதென்று பேர்” எனப் பாடியவர் ..........................
7. “பாரதிநாள் இன்றடா, பாட்டிசைத்து ஆடடா” எனப் பாடியவர்........

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாரதிதாசன் - பெயர்க்காரணம் கூறுக.
2. பாரதியார் படைத்த முப்பெருங்காவியங்கள் யாவை?
3. பாரதிதாசனுக்கு என்ன பட்டத்தை தந்தைப்பெரியார் கொடுத்தார்?
4. புதுவையில் பிறந்த தமிழ்ச் சான்றோர் யாவர்?
5. “பாவேந்தர்”விருதைப் பெற்றவர்கள் யாவர்?
6. தமிழ்ஒளி படைத்த சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய இசை நாடகம் என்ன?
7. இரா. திருமுருகன் எழுதிய நூல்களில் ஏதேனும் இரண்டை கூறுக.
8. பிரபஞ்சனுக்கு சிறப்பைச் சேர்த்த நூல் எது?

**எ. சிந்தனை வினா.**

1. தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?

**செயல் திட்டம்**

உனக்குத் தெரிந்த தமிழ்புலவர்கள் அல்லது தமிழ் அறிஞர்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதி வந்து வகுப்பறையில் உரையாடுக.

# 3. நன்மையே நலம் தரும்



வீடு என்ற சொல் வெறும் கட்டிடத்தை மட்டும் குறிப்பதல்ல; மனிதர்கள் ஒன்றுகூடி வசிக்கும் இடமே வீடாகும். கூடவே மரம், செடி, கொடிகள் இருந்தால்தானே வீட்டில் உள்ளவர்கள் ஆரோக்கியத்துடன் இருக்க முடியும். வில்லவன்கோதை வீட்டில் அப்படி ஒரு அழகிய தோட்டம் இருந்தது. வண்ண வண்ண மலர்களும், பயன் தரும் செடி கொடிகளும் நிறைந்திருந்தன. பழம் தரும் மரங்களை வளர்த்திருந்தனர். அதில் வந்து அமரும் பறவைகளைப் பார்ப்பது ஒரு அழகு, அந்த மரத்தில் கிடைக்கும் பழங்களைச் சுவைப்பது ஒரு ஆனந்தம். அன்றன்றைக்குத் தேவையான காய்கறிகளையும், கீரைகளையும் அவர்களது வீட்டுத் தோட்டத்திலிருந்தே எடுத்துக் கொள்கிறார்கள்.

மாலை பள்ளிவிட்டு வந்ததும் வில்லவன்கோதை அங்குள்ள மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடுவான். ஒரு நாள், அந்த மரக்கிளைகள் ஒன்றில் ஒரு பறவைக் கூட்டைக் கண்டான்.



அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. அவனுடைய பெற்றோரை அழைத்துக் காட்டினான். “ஆமாம், வில்லவன்கோதை! நான் நேற்றே பறவை கூடு கட்டியுள்ளதைப் பார்த்து விட்டேன். இரண்டோ, மூன்றோ குஞ்சுகள் பொறித்துள்ளது. அவற்றின் கீச்.... கீச் .... ஒலியை நீ இன்னும் கேட்கவில்லையா? ” என்றார். “அப்பா, தாய்ப்பறவை இல்லாத சமயம் நான் அந்தப் பறவைக் குஞ்சுகளை எடுக்கட்டுமா?” என்று கேட்டான் வில்லவன்கோதை. உடனே அவன் அம்மா, “நீ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. தாயிடமிருந்து குஞ்சுகளைப் பிரித்துவிட்டால் அவை மிகுந்த துன்பமடையும்” என்றார். சரி சரி என்று தலையை ஆட்டிக்கொண்டே விளையாடச் சென்றான்.

அன்று வில்லவன்கோதையின் பிறந்தநாள். கொண்டாட்டத்துக்குச் சொல்லவா வேண்டும்? கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நண்பர்கள் கூட்டம் அதிகரித்திருந்தது. பிறந்தநாளைச் சிறப்பாக நண்பர்களுடன் கொண்டாட விரும்பினான். பெற்றோர்களிடம் எத்தனை நண்பர்கள் வருவார்களென்றும், எப்படியெல்லாம் பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும் என்பதையும் பட்டியலிட்டிருந்தான். அதன்படி அவன் பெற்றோர்களும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மாலை மூன்று மணியிலிருந்தே வில்லவன்கோதையின் நண்பர்கள் அவன் வீட்டிற்கு வரத்தொடங்கினர். வீட்டைச் சுற்றிப் பார்த்த அவர்கள் அவன் தோட்டப்பக்கம் வந்தனர். தோட்டத்தின் அழகையும் அங்கு பூத்துக் குலுங்கிய மலர்க்கொடிகளையும் கண்டு அளவில்லாத மகிழ்ச்சி கொண்டனர். உயர்ந்து அடர்த்தியாக வளர்ந்திருந்த மரங்கள் குளிர்ந்த நிழலையும் காற்றையும் வழங்கியது. சிறுவர்கள் மரத்துக்கு மரம் ஓடிப் பிடித்து விளையாடினர். சிலர் பூக்களைப் பறித்துக் கீழே வீசி விளையாடினர். சிலர் மரத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்று ஊஞ்சலில் ஆடினர். சிலர் இலைகளைப் பறித்துச் சுருட்டி அடுத்தவர் காதில் பீப் பீ...பீ ஊதினர். இவ்வாறாக சிறுவர்களின் கொண்டாட்டம் எல்லை மீறியது. வில்லவன்கோதையும் அவர்களோடு மகிழ்ச்சியாக ஆடிக் கொண்டிருந்தான்.

அதுசமயம் அவன் நண்பன் அகமது மரத்தின் மேலிருந்த பறவைக்கூட்டைப் பார்த்தான். “ஏய், எல்லோரும் இங்கே பாருங்க, இந்தக் கூட்டில் சின்ன சின்னதாப் பறவைக்குஞ்சுகள் இருக்கும் போல, கீச்........கீச்சுனு சத்தம் கேட்குதுல்ல” என்று கூச்சலிட்டான். ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்த நண்பர்களெல்லாம் பறவை கூடு கட்டியிருந்த மரத்தினிடையே ஒன்று கூடினர். அப்போது யாரும் சற்றும் எதிர்பாராத சமயம் அவர்கள் நண்பன் பீட்டர் திடீரென அந்தக் கூட்டைக் கல்லால் அடித்தான். நல்லவேளை! அவன் எறிந்த கல் குறி தவறி கிளையில் பட்டு அருகிலிருந்த பூந்தொட்டியின் மீது விழுந்தது. இதைப் பார்த்த வில்லவன் கோதைக்குச் சினம் பொங்கியது.

“பீட்டர் ஏன் இப்படிச் செய்தாய்? அந்தப் பறவைக்குஞ்சுகள் பாவம் இல்லையா? நீ எறிந்த கல் அந்தச் சிறிய குஞ்சுகளின் மேல் பட்டிருந்தால் என்னவாயிருக்கும்? உங்கள் வீட்டை யாரேனும் இடித்துத் தள்ளினால், நீயும் உன் குடும்பத்திலுள்ளவர்களும் என்ன செய்வீர்கள்? அதுபோல்தான் அந்தப் பறவைகளின் நிலையும். இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை?” என்று படபடவெனப் பேசினான்.

தன்னுடைய இழிவான செயலை நினைத்த பீட்டர், என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தலை குனிந்து நின்றான். “வில்லவா, என்னை மன்னித்து விடுடா, நான் தெரியாமல் செய்து விட்டேன். மிகவும் வருத்தமாக இருக்கிறது. இனி எப்போதும் இது போன்ற தவறுகளைச் செய்யமாட்டேன்” என்று கூறினான். இதைக் கேட்ட மற்ற நண்பர்கள், “அவன்தான் தன் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறானே அவனை மன்னித்து விடுடா, அவன் மட்டும் இல்லை நாங்களும் இதுபோன்று தவறு செய்ய மாட்டோம்” என்று கூறினர்.

அப்போது அங்கு வந்த வில்லவன்கோதையின் பெற்றோர் நடந்தவற்றை அறிந்து கொண்டனர். “இவ்வுலகில் நம்மைப் போலத்தான் எல்லா உயிர்களும் வாழ்கின்றன. அவைகளிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். மற்ற உயிர்களுக்குச் செய்யும் தீங்கு நமக்கு நேர்ந்தது போல உணர வேண்டும். நமக்கு வலிப்பதுபோல்தானே அவற்றிற்கும் வலிக்கும் அல்லவா?” என்று அறிவுரை கூறினார்.

அவர் அன்புடன் கூறிய அறிவுரையைக் கேட்ட வில்லவன் கோதையும் அவன் நண்பர்களும், “இனி நாங்கள் யாரையும் துன்புறுத்தும்படி நடந்து கொள்ளமாட்டோம்” என்று உறுதிகூறினர். தங்கள் கைவசமிருந்த தின்பண்டங்களை அந்தப் பறவைக் குஞ்சுகளுக்கு கொடுத்தனர். மேலும் நாங்கள் பறவைக்கூடுகளை எங்கு பார்த்தாலும் அவற்றிற்கு ஊறு விளைவிக்காமல் பாதுகாப்போம் என்று உறுதிகூறினர். பறவைகளுக்கு சிறுதானியங்களும் தண்ணீரும் கொடுப்போம் என்றும் கூறினர். பிறருக்கு உதவுவதே சிறந்த பிறந்தநாள் பரிசு என்று கூறி வில்லவன்கோதையை அனைவரும் வாழ்த்திச் சென்றனர்.

**நீதி : பிறரிடத்தும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு கொள்ள வேண்டும்.**

## கற்பவை கற்றபின்

- நீங்கள் எப்படியெல்லாம் உயிர்களிடத்தில் அன்பு காட்டுவீர்கள் என்பது பற்றி விவாதிக்க.

## மதிப்பீடு

**அ. முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் எழுதுக.**

1. செலுத்துவேன் மற்ற அன்பு உயிர்களிடத்தில்
2. கட்டி ஊஞ்சல் வில்லவன் கோதை ஆடினான்
3. மாட்டோம் யாரையும் நாங்கள் இனி துன்புறுத்த

**ஆ. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. பறவைக் குஞ்சுகளை எடுக்க நினைத்த வில்லவன்கோதைக்குத் தாய் கூறிய அறிவுரை யாது?
2. வில்லவன்கோதை வீட்டில் என்ன விழா நடைபெற்றது?
3. பறவைக்கூட்டின் மீது கல்லெறிந்தவன் யார்?
4. பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது குறித்து வில்லவன் கோதையின் தந்தை என்ன கூறினார்?

# 4. மரபுத்தொடர்கள்

மொழி என்பது தகவல் பரிமாற்றத்திற்கு மனிதன் பயன்படுத்தும் ஒரு ஊடகம். ஆனால் அவை ஒரே மாதிரியாக எல்லா இடங்களிலும் வழங்குவதில்லை. வட்டாரத்திற்கு ஏற்றாற்போல் மொழி மாறுபடுகிறது.

ஒரு சொல் அல்லது தொடர் அதனுடைய நேர்பொருளை உணர்த்தாமல் அதனோடு ஒப்புமையுடைய மற்றும் பயன்பாட்டில் வழிவழியாக வேறு குறிப்புப் பொருளினைத் தந்து நிற்கும்போது அவற்றை மரபுத்தொடர் என்போம்.

எ.கா.

| | | | |
|---|---|---|---|
| 1. | அகலக்கால் வைத்தல் | - | தகுதிக்கு மீறி செயல்படுதல் |
| 2. | அரக்கப் பறக்க | - | விரைவாக |
| 3. | ஆயிரங்காலத்துப் பயிர் | - | நீண்ட காலம் நிலைத்திருத்தல் |
| 4. | இரண்டும் கெட்டான் | - | நிலையாக முடிவு எடுக்காதவன் |
| 5. | உள்ளங்கை நெல்லிக்கனி | - | வெளிப்படையாகத் தெரிதல் |
| 6. | உச்சி குளிர்தல் | - | மிகுந்த மகிழ்ச்சி |
| 7. | உருக்குலைதல் | - | தன் நிலையில் இருந்து மாறுதல் |
| 8. | கண் வைத்தல் | - | விருப்பம் கொள்ளுதல்<br>ஆசைப்படுதல் |
| 9. | காது குத்தாதீங்க | - | என்னை ஏமாத்தாதீங்க |
| 10. | வயிறைக் கட்டு | - | செலவைக் குறை |
| 11. | வயித்தெரிச்சல் | - | பொறாமை குணம் |
| 12. | கை கழுவுதல் | - | விட்டு விலகுதல் |
| 13. | கை கொடுத்தல் | - | உதவி செய்தல் |
| 13. | தலைக்கனம் | - | அகந்தை |
| 14. | அவசரக் குடுக்கை | - | பதற்றமடைபவன் |
| 15. | கயிறு திரித்தல் | - | பொய் புரட்டு கட்டுக்கதை கூறுதல் |

## கற்பவை கற்றபின்

- மரபுத்தொடர்களின் பொருளை அறிந்துகொள்ள முயல்க.
- அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பேச்சில் காணப்படும் மரபுத்தொடர்களைத் தொகுத்து வருக.
- மரபுத்தொடர்களைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.

## மதிப்பீடு

அ. சரியானவற்றைக் கண்டறிந்து கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அங்கிருந்த கூட்டத்தினரிடையே பெரும் ------------------------------------------ ( அமளிதுமளி / அவசரக்குடுக்கை ) ஆனது.
2. சுரேஷ் அவன் நண்பனை ------------------------------------------ ( பித்தலாட்டம் / அலைக்கழித்தான் )
3. தலைவர் பேச்சு ------------------------------------------ இல்லாமல் இருந்தது. ( உபதேசம் / உப்புசப்பு )
4. வாழ்க்கையில் எத்தனை துன்பம் வந்தாலும் ------------------------------------------ போட்டு வெற்றியடைய வேண்டும். ( எதிர்நீச்சல் /கயிறு திரித்தல் )
5. அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சில் இலக்கிய நயம் ------------------------------------------ ஓடும். ( காற்றாய் / கரைபுரண்டு )
6. அர்ச்சுனன் ------------------------------------------ அம்புகளை எறிந்தான். ( மெதுவாக / சரமாரியாக )
7. அறிஞர்கள் ------------------------------------------ போன்று அடக்கமாக இருப்பர். ( குறைகுடம் / நிறைகுடம் )
8. தவறு செய்தவன் தன் தவறை ------------------------------------------ மறைக்கப் பார்க்கிறான். ( கொடிகட்டி / பூசிமெழுகி )
9. நம் கடமைகளை சரியாக செய்வதில் நாம் ------------------------------------------ ஈடுபட வேண்டும். ( வாயடைத்து / முழுமூச்சாக )
10. மழை எங்கள் ஊரில் தொடர்ந்து ------------------------------------------ கொண்டிருக்கிறது. ( கரையேறுதல் / வெளுத்து வாங்கி )

### ஆ. பொருத்துக. ( பொருளுக்கு சரியான மரபுத்தொடரைப் பொருத்துக. )

1. அதிகமாகப் பேசுதல் - முதலைக்கண்ணீர்
2. அவசரப்பட்டு பேசுபவன் - தலைக்குனிவு
3. பொய்யாக நடித்து அழுதல் - முந்திரிக்கொட்டை
4. அவமானப்பட்டான் - மலைஏறி விட்டது
5. முடிந்துவிட்டது - வாய் நீளம்

### இ. மரபுத்தொடரைப் பொருளுடன் பொருத்துக.

1. ஓட்டைவாயன் - தப்பித்துச் செல்லுதல்
2. கம்பி நீட்டுதல் - ரகசியம் காப்பாற்றாதவன்
3. கண்மூடித்தனம் - பிடிவாதமாக இருத்தல்
4. குரங்குப்பிடி - மிக வேகமாகச் செல்லுதல்
5. சிட்டாய்ப் பறத்தல் - அறியாமல் இருத்தல்

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

### ஈ. வாக்கியத்தில் அமைக்க.

1. வாய்க்கொழுப்பு
2. புத்தகப்புழு
3. நாளும் கிழமையும்
4. பகல் கனவு
5. ஒரு கை பார்க்கிறேன்

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

### உ. கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளி.

1. மரபுத்தொடர் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.

## மொழியை ஆள்வோம் !

### அ. கேட்டல்

- அன்புடைமை அதிகாரத்திலுள்ள குறட்பாக்களின் பொருளைக் கேட்டறிக.
- மனிதநேயத்தை உணர்த்தும் கதைகளைக் கேட்டு அறிக.

### ஆ. பேசுதல்

- உனது வாழ்வின் உயர்வுக்கு எந்தெந்தப் பண்புகள் உதவியாக இருக்கும்? கலந்துரையாடுக.
- அன்னை தெரசாவின் தொண்டுகளைப் பற்றி 5 மணித்துளிகள் பேசுக.

### இ. படித்தல்

- அண்ணல் காந்தியடிகள், அன்னை தெரசா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்து அறிக.
- நீங்கள் செய்தித்தாளில் படித்த மனிதநேயச் செயலொன்றை வகுப்பில் கூறுக.

### ஈ. எழுதுதல்

**1. சொல்லக்கேட்டு எழுதுக.**

1. பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன்.
2. பாரதிதாசன் பெயரால் விருது வழங்கப்படுகிறது.
3. கவிஞர் வாணிதாசன் புதுச்சேரியைச் சேர்ந்தவர்.
4. வானம் வசப்படும் என்ற நூலை எழுதியவர் பிரபஞ்சன்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. அன்பு - ........................................................................
2. அம்மா - ........................................................................
3. ஆசை - ........................................................................
4. இன்பம் - ........................................................................
5. ஈகை - ........................................................................
6. உடல் - ........................................................................
7. ஊஞ்சல் - ........................................................................

3. மகாத்மாவின் பொன்மொழிகள் அறிவோம்! அதன் வழி நடப்போம்.



- எல்லாவற்றிலும் அறம் தான் அடிப்படை. அந்த அறத்திற்கே உண்மைதான் அடிப்படை.
- குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மகிமை இருக்கிறது. அந்த குறிக்கோளை அடைவதில் இல்லை.
- எப்போதும் உண்மையை மறைக்காது சொல்லக் கூடிய மனதிடம் வேண்டும்.
- மற்றவர்களை வெல்ல நம்மிடம் அன்பைத் தவிர வேறொரு ஆயுதம் இல்லை.
- மகிழ்ச்சி என்பது பெறுவதில் இல்லை, பிறருக்கு கொடுப்பதில் இருக்கிறது.

4. பிறமொழிச்சொற்களை கலவாமல் எழுதுக.

நானும் என் தம்பியும் ஸ்கூலுக்குச் சென்றோம். கிளாஸ்ல எல்லா சப்ஜெக்ட்டுகளையும் நன்றாகப் படித்தோம். எக்ஸ்ஜாமில் நல்ல மார்க் எடுத்தோம்.

------------------------------------ ------------------------------------

------------------------------------ ------------------------------------

5. கோடிட்ட இடங்களை பொருத்தமான சொற்களால் நிரப்புக.

ஒரு நாள் பேகன் என்ற அரசர் காட்டு வழியாக நடந்து சென்றார். அப்போது அவர் ......................... இயற்கைக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது திடீரென்று ......................... மழை பெய்யத் தொடங்கியது. அந்த சமயத்தில் அவர் தூரத்தில் ஒரு............ கண்டார். அப்போது அது தன் ................... யை விரித்தபடி ஆடியது. குளிரால் நடுங்கிய மயிலுக்கு பேகன் தான் அணிந்திருந்த ...................... யைப் போர்த்தினார்.

( மயில், போர்வை, பசுமையான, தோகை, கனத்த )

6. குறிப்புகளைக் கொண்டு விடை எழுதுக.

1. கீழே வரும்; ஆனால் மேலே போகாது. - அது என்ன?
2. அடிப்பாதை இருக்கும்; கால் இருக்கும் - அது என்ன?
3. கண் உண்டு; ஆனால் பார்க்க முடியாது - அது என்ன?
4. கைகள்இருக்கும்; ஆனால் கைதட்ட முடியாது - அது என்ன?






7. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

## கபடி விளையாட்டு மன்றம்

அனைத்துப்
பள்ளி மாணவ,
மாணவியருக்கும்
ஒரு நற்செய்தி




இடம் : அண்ணா விளையாட்டு மைதானம், சென்னை

காலம் : மாணவர் - காலை 9 மணி முதல் 11 மணி வரை

மாணவியர் - காலை 11 மணி முதல் 12 மணி வரை

**வினாக்கள்**

1. நீங்கள் மேலே படித்தது என்ன?
   அ) பாடல் ஆ) கதை இ) விளம்பரம்
2. பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு எது?
   அ) மட்டைப்பந்து ஆ) கபடி இ) சதுரங்கம்

3. மாணவர்களுக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி வழங்கப்படுகிறது?

அ) 1 மணி ஆ) 2 மணி இ) 3 மணி

4. மைதானம் - இச்சொல்லுக்குரிய பொருள் எது?

அ) பூங்கா ஆ) அரங்கம் இ) திடல்

5. விளம்பரத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?

அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.

ஆ) கபடி விளையாட்டில் மாணவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இ) கபடி விளையாட்டு நடைபெறுமிடம் பெரியார் விளையாட்டு மைதானம்

## மொழியோடு விளையாடு

### 1. குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நா | பா | ர | தி | யா | ர் |
| வ | ட | மி | து | ரு | வி |
| அ | ல் | க | ன | வு | ழா |
| ன் | நூ | கு | ம் | ழி | மொ |
| பு | றா | லை | த | டு | வி |

**இடமிருந்து வலம்**

1. இவர் எட்டயபுரத்துக் கவிஞர்
2. இது வெண்ணிறப் பறவை
3. தூக்கத்தில் வருவது

**வலமிருந்து இடம்**

1. பாராட்டி வழங்கப்படுவது
2. மக்கள் பேசுவதற்கு உதவுகிறது
3. சுதந்திரத்தைக் குறிக்கும் தமிழ்சொல்

**கீழிருந்து மேல்**

1. புத்தகத்தைக் குறிக்கும் சொல்

**குறுக்கும் நெடுக்குமாக**

1. முத்தமிழுள் ஒன்று

2. குறிப்புகள் கொண்டு விடை எழுதுக

1. தலைகீழாய் என் வீடு ------------------------------------
2. என் பார்வை கூர்நோக்கு ------------------------------------
3. நானும் ஒரு தையல்காரி ------------------------------------
4. வருமீன் வரும்வரை காத்திருப்பேன் ------------------------------------
5. எனக்கு வீடு கட்டத் தெரியாது ------------------------------------







3. சொல்லிலிருந்து புதிய சொல்

| | | | | |
|---|---|---|---|---|
| பாரதியார் | ---------- | ---------- | ---------- | ---------- |
| மணிக்கொடி | ---------- | ---------- | ---------- | |
| பாவேந்தர் | ---------- | ---------- | ---------- | ---------- |
| நாடகம் | ---------- | ---------- | ---------- | ---------- |
| விடுதலை | ---------- | ---------- | ---------- | ---------- |

4. சொற்களைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.

( எ.கா. ) உண்மை - நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும்.

1. பெருமை ------------------------------------
2. பாடல் ------------------------------------
3. நாடகம் ------------------------------------
4. தோட்டம் ------------------------------------
5. பரிசு ------------------------------------

5. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1. பெருமை பாரதிதாசன் தமிழுக்குச் சேர்த்துள்ளார்
   பாரதிதாசன் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.
2. பறவை அழகான புறா ------------------------------------
3. தமிழ் உண்டாகிறது மேல் ஆர்வம்

   ------------------------------------
4. போற்றும் உலகம் எழுத்தாளர் உயர்ந்த

   ------------------------------------

## தெரிந்து தெளிவோம்

மனித நேயம்

அன்பென்று கொட்டு முரசே - மக்கள்
மக்கள் அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்





## நிற்க அதற்குத் தக...



1. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவேன்
2. நல்ல நல்ல நூல்களைத் தேடிப் படிப்பேன்
3. மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்



## செயல் திட்டம்

- தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கவிஞர்களுள் ஐவரின் படத்தை ஒட்டி ஒவ்வொருவரையும் பற்றி 5 வரிகள் எழுதி வருக.

## அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அநியாயம் | - | நேர்மையின்மை |
| 2. | ஆணை | - | கட்டளை |
| 3. | இரவல் | - | கடன் |
| 4. | ஊழ்வினைப் பயன் | - | விதிப்பயன் |
| 5. | கஞ்சத்தனம் | - | பிறர்க்குக் கொடுக்க மனமில்லாத |
| 6. | கட்டுக்கடங்கா | - | அளவில்லாத |
| 7. | களிறு | - | ஆண் யானை |
| 8. | கும்பிடு | - | வணங்கிடு |
| 9. | குன்றாப்புகழ் | - | குறையாத புகழ் |
| 10. | கொடைப்பண்பு | - | வள்ளல் தன்மை |
| 11. | கைம்மாறு | - | பதிலுதவி |
| 12. | சன்மானம் | - | வெகுமதி |
| 13. | சிந்தை | - | எண்ணம் |
| 14. | தகனம் | - | எரியூட்டுதல் |
| 15. | தண்டித்தல் | - | ஒறுத்தல் |
| 16. | தண்டோரா | - | முரசறைந்து அறிவித்தல் |
| 17. | தரணி | - | உலகம் |
| 18. | துயர் | - | துன்பம் |
| 19. | நங்கை | - | பெண் |
| 20. | நல்குதல் | - | வழங்குதல் |
| 21. | நாணயம் | - | நேர்மை |
| 22. | நானிலம் | - | உலகம் |
| 23. | நீடூழி | - | நெடுநாள் |
| 24. | பரிவு | - | அன்பு |
| 25. | பற்று | - | விருப்பம் |
| 26. | பார் | - | உலகம் |
| 27. | பேழை | - | பெட்டி |
| 28. | மரியாதை | - | மதிப்பு |
| 29. | மாண்பு | - | பெருமை |
| 30. | மாரி | - | மழை |
| 31. | மேனி | - | உடல் |
| 32. | வன்மை | - | வலிமை |
| 33. | விண்ணமுதம் | - | மழைநீர் |
| 34. | விருது | - | பட்டம் |
| 35. | வையத்தார் | - | உலகத்தார் |